*Vol 1.*] MAY-1911. [*No.* 9.
REGISTERED.

# THE GNANAPIRAKASAM.

**A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE, SCIENCE &c**

# ஞானப்பிரகாசம்.

JAFFNA
UNNAKAM



குமாரசுவாமிப்புலவர் நு
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

*கல்லார்தொழும்வெண்ணைநல்லூர்ச்சிவாலயத்துப்*
*பொல்லார்தாள்யாங்காகும்போது.*

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்-க. யாழ்ப்பாணம்:—விரோதிகிருது௵ சித்திரைமீ. இலக்கம்-கூ.

*B. M. A. Sanmugaretna Sarma Editor & Proprietor.*

யாழ்ப்பாணம் "கணேச" யந்திரசாலை.

ஆ. சண்முகரத்தினசர்மா, பத்திராதிபர். &

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷயசூசிகை.


| | |
|---|---|
| திருவாதவூரர்புராணம் | மகா வித்துவான். ஆறுமுகம்பிள்ளை. |
| பிரளயம் | பத்திராதிபர். |
| தமிழ்மொழி | சே. சிவஞானம்பிள்ளை. |
| சிவனடியார்பெருமை | டி. எஸ். தியாகராசஞானியார் |
| தலயாத்திரைப்பொதுவிதி | சி. இ. மாரிமுத்துஉபாத்தியாயர். |
| தொல்காப்பியஆராய்வு | இ. முத்தையவாமிக்குருக்கள். |
| கமலாம்பிகைசரித்திரம் | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| பயிரிடுஞ்சிலகுறிப்புகள் | ,, |
| பெண்கள் கல்வி | அன்னபூர்ணேஸ்வரி. |
| மனிமறையமுத்தத்தோன்றி | ம. கெங்காப்ரசாத் பண்டிதர் |
| புத்தகவரவு | பத்திராதிபர். |
| சமாசாரம் | ,, |
| கம்பராமாயண சிவபரத்துவம் | ,, |
| நல்[illegible]வெண்பா உரை | ,, |
| சேதுபுராணஉரை | ,, |



## விளம்பரம்.

இரங்கூன் பேப்பர் கறென்ஸி
ஆபீஸ் பொக்கிஷக்காரர்
ஆகிய ஸ்ரீமான். திரிசிரபுரம்
ம. பொன்னுச்சாமிப்பிள்ளை;
ராய்சாயிப அவர்கள் இயற்றிய

### கமலாக்ஷி
(படங்களுடன் இரண்டாம் பதிப்பு)

### விஜயசுந்தரம்.
(படங்களுடன் முதற் பதிப்பு)

அருமை வாய்ந்த இந்தச் செந்தமிழ்க் கற்பனைக்கதைகள் பெரும்பாலும் அங்கிலேய நாவல்களின் போக்கை யனுசரித்து எளிய நடையில் நாடகச்சாயலாய் சம்பாஷணைரூபமாக எழுதப்பெற்றுள்ளன. ககூ0ரு ஆண்டில் அச்சிட்டு வெளியான கமலாக்ஷிப் பிரதிகளெல்லாம் விலையாகிவிட்டன. அதன் அருமை பெருமைகளை யுணர்ந்து அனேகநண்பர்கள் வேறொரு கற்பனைக் கதையை எழுதும்படி எனதருமைத் தந்தையைக் கேட்டுக்கொண்டமையால் அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து இப்பொழுது கமலாக்ஷி இரண்டாம் பதிப்போடு விஜயசுந்தரம் என்னும் வேறொரு கற்பனைக் கதையையும் அச்சிட்டு பெருந்தொகைச் செலவுசெய்து வந்தர்ப்பத்திற் கேற்ற விதம் ஒவ்வொரு புத்தகத்திற்கும் அழகிய படங்கள் ஏறக்குறைய உ0 சேர்த்து வெளியிட்டிருக்கிறார். அப்புத்தகங்கள் நேர்மையான பைண்டுடன் வெளியாய் விட்டன.

தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும் உலகதந்திரங்களையும் அறிய விரும்புவோர்க் கெல்லாம் இக்கதைகள் மிகுந்த பயனைத் தருவதோடு மனக்களிப்பையுந் தரும் என்பதற்கையமில்லை.

புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் நாற்பது பாரங்களுக்கதிகமுள்ளன.

புத்தக விலை.

கமலாக்ஷி.

பைண்டு (முழு கலிக்கோ) பிரதி க-க்கு உ-அ-0
ராப்பர் தனிப்பிரதி க-க்கு உ-0-0 (தபாற்செலவு வேறு)

விஜயசுந்தரம்.

பைண்டு (முழு கலிக்கோ) பிரதி க-க்கு உ-அ-0
ராப்பர் தனிப்பிரதி க-க்கு உ-0-0 (தபாற்செலவு வேறு)

இப்படிக்கு
தி. பொ. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
சுக-ம் நம்பர் வீடு. சஅ-வது தெரு
ஈஸ்டு இரங்கூன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்.

# எமது ஞானப்பிரகாசத்தைப்பற்றி

மதுரை யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கப்புலவரும்

வண்-சைவப்பிரகாசவித்தியாசாலைத்

தலைமை உபாத்தியாயரும்

எமது ஆசிரியருமாகிய, சுன்னுகம்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

பற்றுள செந்தமிழ் வாக்கியங் காட்டும் பகைநொதுமல்
அற்றுயர் நூதன சம்பவங் காட்டு மருங்கவிக்குச்
சிற்றுரை காட்டும் பொழிப்புரை காட்டுஞ் சிறந்தபொருள்
உற்றுள ஞானப் பிரகாச மென்னு மொளிவட்டமே.

---

குமாரசுவாமிப்புலவர் நூ
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

மதுரைத் தமிழ்ச்சங்கப்புலவரும்

சென்னை பிரஸிடென்ஸிகாலேஜ்

தமிழ்ப்பண்டிதரும் ஆகிய

மகா மகோபாத்தியாயர்

பிரமஸ்ரீ. வே. சாமிநாதையரவர்களிடமிருந்து

கிடைக்கப்பெற்றது.

"ஞானப்பிரகாச" மென்னும் பத்திரிகைவரப்பெற்றுப் படித்துப்பார்த்து மிக்கஆனந்தமுற்றேன். பல அரியவிஷயங்கள் இதில் அங்கங்கேவரையப்பெற்றிருப்பதைப் பார்த்தபொழுது இப்பெயர் இதற்குத்தகுமென்று தோற்றியது. சிலநூல்களுக்கு அரும்பதவுரைமுதலியனவும் எழுதப்பட்டுவருதலின், 'தமிழ்ப்பாஷாபிமானிகளுக்கு இப்பத்திரிகை மிகப்பயன்படுமென்று எண்ணுகிறேன். தமிழ்நூல்களைக் கற்போரும் கற்பிப்போரும் பெரும்பாலும் அரியராய இக்காலத்தில் இது போன்ற பத்திரிகைகளிருத்தல் இன்றியமையாததென்பதை நான் 'தெரிவித்தல் மிகை. இதை நடத்துவோருடைய நற்குணம் முதலியவற்றையும் விஷயதானஞ் செய்பவர்களின் கல்விவன்மைகளையும் உற்றுநோக்குகையில் இப்பத்திரிகை நாளடைவில் இன்னும் மிகச்சிறப்புற்று விளங்குமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

சென்னை
24-3-11

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாதவூரர்புராணம்.

திருவாதவூரர்புராணம் என்பது திருவாதவூரருடைய பழஞ்சரித்திரம் எனப்பொருள்படும். திருவாதவூரராவார் யாவரெனின்; பாண்டிமண்டலத்திலே உள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமணகுலோத்தமராய்விளங்கிய சம்புபாதாசிரிதர் என்பவருக்கு அவர் பத்தினியாகிய சிவஞானவதியாருடைய திருவயிற்றிலே உற்பவித்து, பௌத்தம் முதலிய பரசமயங்களைக் கண்டித்து, சைவசமயத்தைத் தாபித்துச் சமயகுரவரென வழங்கப்பட்ட ஒருபக்தசிரோமணி. இவருடைய பிள்ளைத்திருநாமம் திருவாதவூரர் என்பது. அது,

க. "திருவாதவூர ரெனுந்திருநாமந்தரித்தார்கள்" வாதவூரர்புராணம்.

உ. "மன்னு மிந்நகரிதன்னுண் மானமங்கலத்தாராகுந், தொன்னெறிமுனிவராமா மாத்தியர்தொழுகுலத்து, நன்னெறி விடையிற் போந்தோர் நனகணத் தலைவர் நாமம், மின்னெறி வாதவூரரென்னவந்துதயஞ்செய்தார்."

பழையதிருவிளையாடல்.

என்னும் பிரமாணங்களால் இனிது துணியப்படும். இதனை மறுக்கவல்லவர் யாவர்! திரு என்பது சிறப்புக் குறித்து வந்த ஓர் அடைமொழி. வாதவூர் என்பது வாயுதேவன்வழிபட்ட காரணம்பற்றிவந்த பெயர். வாதவூரர்என்பதுஉடைமைபற்றிவந்தபெயர். இதற்குச்சான்றாக ஆரூரன்புலியூரன், ஆவந்திகன், மாகதன்முதலியபெயர்களையும் நோக்குக வடநூலாரும் "வாதபுரேசர்" என்பர்.

இவையெல்லாம் இங்ஙனமாகச்சென்றபத்திரிகையொன்றிலே ஒருவர் "திருவாதவூரர்புராணம்" என்பதைத் "திருவாதவூரடிகள் புராணம்" என்றிட்டுக்கொண்டு அதற்குச் சில சாட்சியங்களுங் காட்டுகின்றனர், எத்தனைசாட்சியங்கள் வரினும் என்! அவையெல்லாம் பரியாயமாய் அயலிலே நின்று அப்புராணத்தைச் சுட்டுவதன்றி அப்புராணப் பெயராவது எப்படி? "திருவாதவூரரெனுந் திருநாமந்தரித்தார்கள்" என்ற நூலாசிரியருக்குத் தாம்பாடிய அவர்புராணத்தைத் "திருவாதவூரடிகள்" என்பதுங் கருத்தாகுமா? ஆகியில் அச்சிட்ட சரவணப்பெருமாளையர் கருத்துயாது? திருவாதவூரர்புராணம்என்பதனால் வரும் இழுக்கு யாது?

திருவாதவூரர் என்பதினுந் திருவாதவூரடிகள் என்பதேசிறப்பு என்று சிலர் கூறுவர். கந்தபுராணம் என்பது சிறப்பா? கந்தசுவாமிபுராணம் என்பது சிறப்பா? அரிச்சந்திரபுராணம், அசதிக்கோவை, கந்தரந்தாதி முதலிய நூற்பெயர்களெல்லாம் சிறப்பில்லாதனவா? சிறப்பாய் யாவரும் வழங்கிய நூற்பெயரும் மாறுபடுமா? சிறப்புநோக்கி வழங்கும் இடம்யாது? "வாதஆரிறைபுராணம் படித்தவர் கேட்டோர்வாழ்க" என்று முடிவிலே வருவதுநோக்கி "வாதஆரிறைபுராணம்" என்றும் வழங்கலாமா? சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் பதிப்பித்தபிரதியை அநுசரித்தெழுந்தவொருபதிப்பிலே "திருவாதவூரடிகள் புராணம் என்பது ஈண்டுப் பொருந்தாது" என்று முடிவிற் கருத்து யாது?.

மகாவித்துவான்

ஆறுமுகம்பிள்ளை.

---

### நமதுகையோப்பநேயர்களுக்கு

பத்திரிகைகள் கையொப்பநேயர்களாலேயே நடைபெறுவன. ஆதலின் தத்தம் கையொப்பப்பணத்தை அனுப்பியுபகரித்து எமது செந்தமிழ்மொழியினை வளர்க்குமாறு வேண்டுகின்றோம்.

[ப—ர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." திருக்குறள்.

குமாரசுவாமிப்புலவர் நூ
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம்-க. யாழ்ப்பாணம்:—விரோதிகிருது௵ சித்திரைமீ. இலக்கம்-கூ.

உ
கணபதி துணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டேற்றகரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

# ஞானப்பிரகாசம்

## பிரணவம்.

உய்யவல்லார்கற்குயிர்சிவஞானமே
உய்யவல்லார்கட்குயிர்சிவந்தெய்வமே
உய்யவல்லார்கட்கொடுக்கம்பிரணவம்
உய்யவல்லாரறிவுள்ளறிவாமே என்பது
திருமந்திரம்.

அந்தணர்க்குப் பிரமதேஜஸை வருவிப்ப மூலமாய் நிற்பது பிரணவமே என்பது வேதவாக்கியம்.

இன்னும் அப்பிரணவத்தில் "ஓம் எனுமோரெழுத்ததனினுள்ளொளியாமவனறிவினுக்கறிவுமாயினன்" என்றபடி பரம்பொருளின் வியாபகவுண்மை அதனிடத்திருத்தலினால், உண்மைதிகழ் விடைக்கு "ஓம்" எனவிடையிறுத்தல் வேண்டும் என்பதே நெறிப்படும் முறைமையினையுடையதாகும். அன்றியும் நம்முன்னோர், அதன் தத்துவார்த்தத்தை ஒட்டியே அங்ஙனம் நிறுவினர் என்றுமுணர்க.

ஓராய்கொல், ஓர்ந்தனைகொல், ஐயுற்றாய்கொல், என்று ஒருவன் தன்முன் நேராகுமொருவனது முகத்தினைநோக்கி வினவிடின் உண்மைதிகழ் விடைக்கும், பொருள்பலவும் அவற்றியல்பும் திரிபற நன்குணர்ந்து ஒருவன், மற்றோர் தெருளுடையானது முகத்தினைநோக்கி வற்புறுத்தவினவின் உண்மைதிகழ்விடைக்கும் "ஓம்" என்றே உரைக்கப் படுதலினால், இதுபொருள்களனைத்திலுக்கும் மருளகல் வாசகமாகும். "என்றென் றிறைஞ்சியிருதாமரைத்தாளி, லொன்றுங்கதிர் முடியாற்கோமென் றுரைத்தருளி." (வில்லி-பாரதம்.)

எனவருவனவற்றால் "ஓம்" என விடையிறுக்கும் வழக்கம் தொல்லைநாட்டொடங்கி அடிப்பட்டு வந்ததொன்றென்பது விளங்கும்.

இவ்வாறன்றி வேற்றுமொழிகள் சில நாடுகளிலப் பொருண்மை பயப்பவழங்கப்படுமாலெனில், அவைகள் இதுபோல் இருமையும் பயக்கும் பெருஞ்சிறப்புடையனவாய்த் தொல்லைமரபிற்பொருந்திவந்தன அல்ல என்க.

அறிந்தேனும் அறியாதேனும் தீண்டிய வழி சுடும் இயல்பினை உடைய அக்கினிபோல, தன்பொருளை அறிந்து கூறினும் அறியாது கூறினும் கூறியார்க்கு ஞானநல்வளமெய்துவிக்கும் இயல்பினை உடையது பிரணவம் என்றுணர்க.

"புந்திகொள் பிரணவம் போற்றிடாமையு, மைந்தெழுத்துண்மை நன்கறிதராமையு, நந்தியவிவைமுதற்பலநன் ஞானந்தான், சந்தமுற்றெழாமைக்குத் தக்ககாரணம்"

என்பதனால் ஞானசம்பந்தம் பிரணவத்துடனுளதாமாறறிந்து கொள்க.

முற்றத்துறந்து நான்காம் நிலையினின்றார், ஐயமேற்றுண்ணக் கிராமத்தினுட்புகுங்கால் "ஓம் ஹரி" எனப் பிரணவ நியூயஞ்செய்துகொள்ளல்வேண்டும்; செய்து வந்த பயிற்சிவயத்தால் ஐம்பொறிகள் நெறியின் புறஞ்செல்ல ஒரோவழி மனனிலைதிரியினும், திரியாது தடுத்து ஞானவைராக்கிய நிலையில் நிறுவிக்கலக்கமுறாது காத்தற்குரியது அதுவேஆதலான் என உபநிடதம் விதிக்கின்றது. 'ஹரி' என்பது நிச்சயப்பொருண்மை உணர்த்தும்.

அவ்வுபநிடதம் உயிரினுள்ளுணர்வும் பிரணவமென்றும் "ஓம்" எனச் சேர்ந்து ஒலிக்குங்கால், அது "உயிரொலி எனவும் பிரணவநாதம்" எனவும் பெயர்பெறும் என்றும் கூறுகின்றது.

உ

சிவமயம்.

# தமிழ்மொழி.

(கஉசு-ம் பக்கத் தொடர்ச்சி.)

### தமிழ்என்பதன் சொற்பொருள்

தமிழ் என்னுஞ்சொற்கு யாதுபொருள். திராவிடம் என்னுஞ் சொல் திரமிளம் என்றாய்த் திரமிளம் என்பது தமிழ் எனத் திரிந்தது என்பர் ஒரு சாரார். தன் பெயரை பிறபாஷையின் பெயராகக் கொண்டிருக்கும் பாஷை எவ்வாறு தனித்தியங்கும் ஆற்றலுடையது என்றும் ஆசங்கை நிகழுமாகலானும், மேற்கூறிப் போந்தவைகளால் தமிழ்மொழி பிறபாஷைகளின் உதவியின்றித் தனித்தியங்கும் ஆற்றலுடைமை பெறப்படுதலானும் அது பொருளன்பது யாண்டையதென்க. ஒரு சாரார் தமிழ் என்னுஞ் சொல் (இகழ். உமிழ், கமழ் என ழகரப்பேறு பெற்ற சொற்கள்போல்) தனிமைப் பொருள் குறித்திடும் தமியென்னும் வினையடியாற் பிறந்து வினைமுதற்பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகரம் விரிந்து தனக்கிணையில்லா மொழி என்று பொருள்பயக்கும் என்று கூறிமுடிப்பர். இதுவும் அத்துணைச் சிறப்பாதல் கண்டிலம். தமிழு என்னுஞ்சொல் தமிழ் என உகரம் புணர்ந்து கெட்டு நின்றதோர் மொழியாம். இம்மொழி தன்பெயரானே தனக்குரிய முதலெழுத்துக்கள் இன்னவென்பதைக் குறிப்பான் உய்த்துணர நின்ற அருமை பெரிதும் பாராட்டற்பாலது, என்னை? தகர மகர ழகரங்கள் அகர இகர உகரங்களோடு இயையத் தமிழு என்னுஞ்சொற் பிறந்தமையான் மெய்யெழுத்துக்கள் மூவகைத்தென்பதும், சிறப்பு நோக்கித் தகரம் முன்னரும் அதற்கினமொத்த மகரம் அதற்குப் பின்னரும் ழகரம் அவ்விரண்டிற்குப் பின்னரும் நிற்றலின் அவைவல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூன்றுபிரிவினையுடைய தென்பதூஉம் இம்மூன்றுமெய்யெழுத்துக்களும், உயிரோடியைந்து நிற்றலின் மெய்கள் தனித்தியங்கும் ஆற்றலுடையன வல்லவென்பதூஉம் பெற்றாம். இனி உயிரெழுத்துக்களில் குற்றெழுத்தின் விகாரமே நெட்டெழுத்தாகலானும், குற்றெழுத்துள்ளும் அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத்திசைந்து நரமடங்கல்போல் நிற்பது எகரமும், அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்திசைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு நிற்பது ஒகரமுமாகலானும், இனமில்லாத ஐகார ஔகாரங்கள் "அம்முனிகரம் யகரமென்றிவை எய்தின் ஐயொத்திசைக்கும், அவ்வோடுவ்வும் வவ்வும் ஔவோரன்ன" என்ப ஆகலானும் அவற்றையொழித்து ஒழிந்தனவாகிய தனித்தியங்கும் சிறப்புவாய்ந்த அகர இகர உகரங்களின் பிறப்பிடமுறையே முறையாக அமைந்துகிடக்க ஏனையவற்றை உய்த்துணரநின்றமை காண்க. இத்துணையும் கூறியவாற்றால் தமிழ் என்னுஞ்சொல் தன்பெயர் கூறுமுகத்தானே தனக்குரிய எழுத்துக்களை உணர்த்தினமை பெரிதும் வியக்கற்பாலது. விரி வஞ்சி இம்மட்டில் நிறுத்தினும்.

தமிழ் என்னுஞ் சொல் இனிமையென்னும் பண்புணர்த்தும். அது "மீனுங்கொடியும், விரிதிரையைந்தும், தேனுறைதமிழும் திருவுறை கூடலும் மணத்தலின் மதிக்குல மன்னவனாகியும்" என்னும் கல்லாடத்தினும் "தமிழ் தழீ இயசாயலவர்த்தங்கு மலர்த்தூநீர்-உமிழ் கரகம் ஏந்த உரவோனமர்ந்து பூசி" என்னும் சிந்தாமணிச் செய்யுளில் தமிழ் தழீ இயசாயலவர் என்பதற்கு நச்சினார்க்கினியர் இனிமைதழுவியசாயலை உடையவர் என்று உரைத்தபொருளினும் "குழல் வண்டு தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரையே" என்னும் இராமாவதாரச்செய்யுளினும் இனிதுவிளங்கும். தமிழ் என்னும் தருமவாசகம் தருமிமேல் நின்றது; முருக என்னும் பண்பு முருகன் என்னும் பண்பிமேல் நின்றவாறுபோல்.

வடமொழிக்கலப்பு:—

உலோககால மனிதர்களையும் அவர்களை வென்ற நாகர்களையும் கீழ்ப்படுத்தி இவ்விந்தியாவைக் கைக்கொண்டவர்கள் தமிழர்கள் என்பது மேலே கூறிப்போந்தோம். இவர்கள் இவ்வாறிருக்க வடமேற்கே அநேக காவதங்கட்கு அப்புறமுள்ளதும் ஐரோப்பியாக் கண்டத்தினொரு பகுதியுமாகிய "ஸ்காந்திநேவியம்" என்ற இடத்தினின்றும் ஆரியர் என்ற ஒரு சாதியர் புறப்பட்டு நாலாபக்கங்களிலும் சென்று சேர்ந்தனர். அவர்கட்குள் ஒருபிரிவினர் மத்திய ஆசியாவிலுள்ள துருக்கிஸ்தானம் என்ற இடத்திற்றங்கினர். இவ்விடத்தில் தங்கிய ஆரியர்களே காபூல் வழியாக இந்தியாவில் பிரவேசித்தனர். இவர்கள்தான் தமிழர்களை வென்றவர்கள். இவர்கள் பாஷை ஸமஸ்கிருதம். ஆரியரும் தமிழரும் ஒரேநாட்டின்கண்ணிருந்து ஒருங்கு வாழவேண்டியது அவசியமாயிருந்தமையால் ஆரியர் தமிழும் தமிழர் ஸமஸ்கிருதமும் பயில்வாராயினர். இவ்விருதிறத்தினரும் தம்முள் ஒத்துநடந்தமையின் அவ்விருவர்பாஷைகளும் தமக்குள்கலப்பனவாயின. வடமொழியாளர் தங்களுடைய சாமர்த்தியத்தால் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும், மேலதிகாரப்பிரபுக்களெனவும் அமைந்துகொண்டனர். தமிழருட் சாமானிய ஜனங்கள் அவ்வாரியரது விருப்பத்திற்கேற்ப இணங்கி நடந்தனர்கள், இவர்கள் வடமொழிச்சொற்கள் பலவற்றைமேற்கொண்டு வழங்கப்புகுந்தமையின் நாளடைவில் வடமொழிச்சொற்கள் தமிழ்ப்பாஷையின்கண் வேரூன்றிவிட்டன. தமிழ்மொழியானது வந்தவிருந்தினர்களை அன்புடன் எற்றுக் கூடிக்குலாவும் பெரியோர்போல் ஆரியமோடு உறவுகொண்டு கலந்து இற்றைக்கும் இருவகை வழக்கருமல் நிலவுகின்றது. ஆரியம் காலகதியில் பேச்சுவழக்கற்று அழிந்துபட்டது. பேச்சுவழக்கற்று ஏட்டு வழக்கில் மட்டிலிருக்கும் பாஷையோடு இருவகைவழக்குமுள்ள பாஷை எவ்வாறுகூடி இயங்கும். இதுவே ஆரியமொழிகள் தமிழ்மொழியில் வழங்குவதற்கும். தமிழ்மொழிகள் ஆரியத்தோடு மருவாமைக்கும் காரணமாகும்.

வரும்.

சே. சிவஞானம்பிள்ளை.

## சிவனடியார் பெருமை.

(கஉ௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

உலகத்தில் பெரிதிற் பெரிது சிவனடியார்பெருமையே. பெரியது எதுவென்று நரைமூதாட்டியைக் குமாரக்கடவுள் கேட்டகாலத்து அந்நரை மூதாட்டியும் "பெரியதுகேட்கின் எரிதவழ் வேலோய், பெரிது பெரிது புவனம்பெரிது புவனமோ நான்முகன்படைப்பு நான்முகன் கரியமாலுந்தியில் வந்தோன் கரியமாலோ அலைகடற்றுயின்றோன் அலைகடல் குறுமுனியங்கையிலடக்கம் குறுமுனிகலசத்திற் பிறந்தோன் கலசமோ புவியிற்சிறுமண் புவியோ அரவினுக்கு ஒருதலைப்பாரம் அரவோ உமையவள் சிறுவிரல்மோதிரம் உமையோ இறைவருள்ளத்தடக்கம் இறைவ

ரோ தொண்டருள்ளத்தடக்கம் தொண்டர்தம் பெருமையைச்சொல்லவும் பெரிதே." என்றுகூறிப்போந்தாள்.

ஆதலின் தொண்டர்தம் பெருமையையளவிடலரிதாமென்க. தொண்டரியல்பை "திருஞானசம்பந்தசுவாமிகளும்" திருமணப்பதிகத்துணர்த்தியது.

"கல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம், பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில, சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர், நல்லூர்ப்பெருமணமேயநம்பனே.

என்னும்பாசுரத்துள் திருநல்லூரில் பெருமணமென்னு மாலயத்து எழுந்தருளிய "நம்பன்" என்னுந்திருநாமத்தையுடைய சிவபெருமானே! அடியேனுக்கு அம்மிமிதித்தல் முதலிய கல்லூர்ந்துசெய்யும் பெரிய விவாகம்வேண்டாம் பலபெரியோர்களால் மிகமேன்மையாகக் கொண்டாடியதுமலநீக்குமே. இவை செய்யுட்களையுடைய நூல்களையாராய்ந்து பார்த்தும், சுவாநுபவ ஞானமில்லாவிடத்து வெளிப்படுவனவல்ல. ஆதலின் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தையுடைய சிவபக்த சிரேட்டர்கள் பெருமணச்சொல்லாராய்தலே மேற்கொள்ளார்கள். இதற்குமேற்கோள் ஸ்ரீ "மாணிக்கவாசகசுவாமிகள்" திருவாய்மலர்ந்தருளிய "கல்வியென்னும் பல்கடற்பிழைத்தும்."

"கற்றவரையான்வேண்டேன் கற்பனவுமினியமையும்" என்னும் மகாவாக்கியங்களாம்.

நண்பர்காள்

இத்துணைநேரம் கூறிப்போந்த விஷயங்களினாலே பெறுதற்கரிய மானிடயாக்கையைப் பெற்றநாம் செயற்பாலனவாகிய முதற்கருமம் சிவனடியையடைவதற்குரிய திருத்தொண்டுகளே யென்பது தெற்றெனப்புலப்படுகின்றது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் அவ்வழிக்குரிய மார்க்கத்திலே செல்லும்படி திருவருளனுக்கிரகிக்கச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

முற்றிற்று.

டி. எஸ். தியாகராசஞானியார்
கமலாசினிப் பத்திராதிபர்
திருவாரூர்

# தலயாத்திரைப் பொதுவிதி.

(க௨கூ-ம் பக்கத்தொடர்ச்சி)

சிராத்தாங்க தர்ப்பணமில்லாதசாகிகட்குப்பிண்டத்தின்மேல் விடும் பாநீய தர்ப்பணமே யன்றி வேறில்லை.

தீர்த்தச் சிராத்தத்தும், கயாசிராத்தத்தும் அவ்வாறு அவ்விருவரும் தீர்த்தத்தில் வந்தால், திலத்தோடு நிடேதகாலத்தும்விதித்தகாலத்தும், தீர்த்தநைமித்திக தர்ப்பணஞ் செய்வர். மிருதியில் நாலாம் வருணத்தாருக்குக் கூறிய நித்தியதர்ப்பணம்.

சர்சூத்திரருக்கு மத்தியான ஸ்நானஞ் செய்தவுடன் விதிதமான ஆசனத்திருந்து தருப்பையோடு கூடிய இரண்டுகைகளினாலும் தேவர், மனுடர், பிதிரர் முதலியோருக்கு ஸ்நானாங்கதர்ப்பணத்திற் கூறிய பிரகாரம் தர்ப்பிக்கும்படிமதனபாரிசாதக் கிரந்தத்தில் யோகயாக்கிய வல்க்கிய முதலிய வசனங்கள் காட்டி, மந்திரமின்றி பிரமயக்ஞ நித்திய தர்ப்பணங் கூறப்படும்.

அங்கித்திய தர்ப்பணங்களாவன:—பிரமா, விட்டுணு. உருத்திரன், பிரசாபதி, தேவர்கள், வேதங்கள், இருடிகள், புராணாசாரியர், இதராசாரியர், சம்வத்சரம், சாவயவம். தேவஸ்திரீகள், அப்சரசுகள், அசுரர், நாகர், சமுத்திரங்கள், பர்வதங்கள், நதிகள், மனுடர்கள், யக்ஷசர்கள், இராக்ஷசர்கள், பிசாசர்கள், கருடர்கள், பூதங்கள், பசுக்கள், வனஸ்பதிகள், ) அவுடதங்கள், நால்வகையோகிகள் என்னும் இருதிணைப் பொருள்கட்குத் தேவதர்ப்பணமும், சனகன், சனந்தனன், சனாதனன், கபிலன், ஆசுரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சசிகன், மரீசி, அத்திரி, ஆங்கிரா, புலஸ்தியன், புலகன், கிருது, பிரசேதா, வசிட்டன், பிருகு, நாரதன் என்னும் இவர்கட்கு இருடி தர்ப்பணமும், வசுக்கள், உருத்திரர்கள். ஆதித்தியர்கள், மருத்துக்கள், அசுவினிகள் என்னும் இவர்கட்குச் சாமான்ய பிதிர் தர்ப்பணமும், வசுவாதி நாமங்களோடு சேர்த்தேனும், சேராமலேனும். இன்ன கோத்திரத்தையுடைய எனது பிதா இன்ன தாசன் திருப்தியடையக் கடவனென்று விசேட பிதிர் தர்ப்பணமு மாகிய இவைகள்.

இந்நித்திய தர்ப்பணத்தில் பிதாவுடையவன், கவ்வியன், வடவானலன், சோமன், யமன். அர்யமன், அக்கினிச்சுவித்தா. சோமபா, பர்கிஷதன், என்னும் தேவ பிதிர்கட்குத் தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

பிரமா முதலியோர் தர்ப்பணத்து ஏகவசனத்தில் திருப்தியதாமென ஏகவசனமும், துவிவசனத்தில் திருப்தியேதாமென வெகுவசனமும் உச்சரிக்கவேண்டும்

உதாரணம்

பிரமா - திருப்தியதாம்
அசுவினிகள் - திருப்தியேதாம்
வசுக்கள் - திருப்தியந்தாம் எனவரும்

இருடிதர்ப்பணத்தும், பிதிர் தர்ப்பணத்தும் திருப்தியது எனவும் உச்சரிக்கலாம்.

தீர்த்தத்து ஸ்னானமானவுடன் மத்தியானத்து ஓர் கால் இவ்வாறு தர்ப்பித்துப் பின் தீர்த்தச் சிராத்தஞ் செய்தல்வேண்டும்.

இவர்க்குச் சந்தியாவந்தனம். வைசுவதேயம், பிரமயக்ஞம், இல்லாமையால் நித்திய பிதிர் தர்ப்பணமொன்றே திலத்தோடு செய்யுமிடத்து நைமித்திகமுமாம். இது தீக்ஷையில்லாதார்க்குரித்து.

அவருள் தீக்ஷையுடையவர்களுக்கு விதி.

தீர்த்ததில் கங்காதரிசனமும் சசேலஸ்னானமுஞ்செய்து அதன்பின் ஆசனமும், பிராணாயாமமும். சகளீகரணமும்செய்து சங்கற்பித்து இஷ்ட தெய்வங்களையும், குருவையும் நமஸ்கரித்து அதன்பின் சுத்ததேசத்தில் எட்டங்குலத்தின் கீழெடுத்த மிருத்திகையைக் கரையில் மூன்று கூறுகவைத்து அதில் இருகூறெடுத்து அஸ்திர மந்திரத்தா லபிமந்திரித்துச் சலக்கரையிலிருந்து சலஞ்சேர்த்து ஒருகூற்றைப் பாதமுதல் நாபியளவும் பூசிக்கழுவி ஏனைய கூற்றைச் சிரசுமுதல் அவயவங்களிற்பூசி, நாபியளவு சலத்திலிறங்கி, காலாக்கினிக்குச் சமானமான பிரகாசத்தையுடைய அஸ்திரமந்திரத்தைத் தியானித்து ஸ்னானஞ்செய்யவேண்டும். அது மணவாக்குக்காயங்களிலுள்ள மலங்களைப் போக்குவதாய் மலஸ்னானமெனப்படும். மேல் அஸ்திர சந்தியும் விதிஸ்நானமும் முறையே செய்யவேண்டும்.

அஸ்திர சந்தியாவது:—நாபியளவு சலத்தில் நின்று ஆசமித்து அஸதிர சந்நிதியை நினைந்து அஸதிரமந்திரத்தால். சிரசில் முக்காற் புரோட்சித்து, முக்காற்தர்ப்பித்து, அஸதிர காயத்திரியால் மூன்று தரம் அர்க்கியங் கொடுத்து, அக்காயத்திரியைப் பத்துருச்செபித்தல். இது பொதுமையில் ஸநானங்க தர்ப்பணமுமாம்.

வரும்.

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

# தொல்காப்பிய ஆராய்வு.

"தொல்காப்பியச் சண்முகவிருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிரவிருத்தி" என்னும் பெயரைப் பிருட்டபக்கத்திலுள்ள புத்தகம் ஒன்று நாம்பார்க்கும்படி நேர்ந்தது. அப்புத்தகத்திலே நமக்குத்தோன்றும் ஆசங்கைகளுக்களவில்லை.

(க) "தொல்காப்பியச்சண்முகவிருத்தி."

என்பதுதான் பெயராயின்; பின், கடவுள்வாழ்த்தின் முகத்திலே "தொல்காப்பியம்" என்றும் "சண்முகவிருத்தி" என்றும் இருதொடராக இட்டுக்கொண்டவாறென்னை? இரண்டுந் தம்முள்ளே முரணுறுமோ?

(உ) பின் "வடவேங்கடந்தென்குமரி" என்னுஞ் சிறப்புப்பாயிரத்தின்முன் "தொல்காப்பியம்" என்றும் பாயிரவிருத்தி என்றும் இட்டுக்கொண்டவாறென்னை

௩ "தொல்காப்பியச் சண்முகவிருத்தி" எனவே பாயிரம், நூன்மரபுமுதலியனவும் விருத்தியென்பது போதரவும் அதனைநோக்காது பின்னும்விருத்திசேர்த்துப்பாயிர விருத்தியென்றவா றென்னை? பாயிரமும் வேறே! தொல்காப்பியமும்வேறே! அவ்வாறே "பாயிரவிருத்தி" "தொல்காப்பியச் சூத்திரவிருத்தி" என்று சிவஞானமுனிவரும் கொண்டாரெனின்; அங்ஙனங் கொள்ளாது ஒன்றென்பதுபோதரத்"தொல்காப்பியச் சண்முகவிருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிரவிருத்தி" என்றவாறென்னை? நன்னூல்விருத்தி என்பதன்றி அதனுட்பிரிவுகளாகிய பொதுப்பாயிரம் முதலியவைகளுக்கும் விருத்திசேர்த்து வழங்குவதுண்டா?

௪ முதலாம்பக்கத்திலே "பாயிரவிருத்தி" என்று மகுடநாமஞ் சூட்டியபடியே பாயிரவிருத்திமுடிந்ததென்னாது. 159-ம் பக்கத்திலே "பொதுப்பாயிரவிருத்தி முடிந்தது" என்றதும் பொருந்துமா? "பொதுப்பாயிரவிருத்தி" என்னும்பெயர் முதலின்றி முடிவில்வந்தவாறென்னை.

௫ "வடவேங்கடந்தென்குமரி" என்னுஞ் சிறப்புப்பாயிரத்தை மூலபாடமாகக் கொண்டு எழுதிச்சென்ற உரையைப் "பொதுப்பாயிர விருத்தி,' என்பதும் பொருந்துமா?.

௬ 160-ம் பக்கத்திலே யாதொருமுகவசனமும் இன்றித்தொடங்கி 246-ம் பக்கத்திலே "சிறப்புப்பாயிர விருத்திமுடிந்தது" என்றகாரணமென்னை? சமஸ்கிருத நூல்களிலாவது, தமிழ் நூல்களிலாவது, சருக்கம், அதிகாரம், இலம்பகம், ஆதியவற்றுள் ஒன்றைமுதலிலே காட்டாது முடிவிலே ஒன்றைமுடிந்ததென்று காட்டுதலும்வழக்காறுமோ.

இங்ஙனம்.

இ. குருஸ்வாமிக்குருக்கள்

முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை

தைலைநகர்.

மங்கையர்க்கரசி என்னும்

## கமலாம்பிகைசரித்திரம்.

(கஙஉ-ம் பக்கத்தொடர்ச்சி.)

வீரவிக்கிரம மன்னவனுக்குப் பக்கத்தே செங்கமலம் இருப்பதைத் துஷ்டகேதுவானன் கண்டு விரைவாக அவ்விடத்திற்கு வருதலும் அதைச் செங்கமலமானவள் கண்டு திடுக்கிட்டு பின் ஓர் யுக்தி செய்து பக்கலில் வைகும் பார்த்திபனைப் பார்த்துப் பிராணேசா! அதோபாருங்கள் ஒருவர் வருகின்றார் அவர்தான் எனது உடன்பிறவாச் சகோதரன் நாங்கள் அவரை வரவேற்று உபசரித்தல்வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது துஷ்டகேதுவும் படியேறி மாடிமீது வந்துவிட்டான். அப்பொழுது செங்கமலமும் சாதுரியத்தினால் ஓர் யுக்திசெய்து அவனைப்பார்த்துக் குயிலும் நாணும்படி. அண்ணாவாருங்கள் என்றுசொல்லித் தானிருந்த ஆசனத்தினின்றும் எழுந்து அவ்வாசனத்தில் இருத்தினள். அரசனும் அவனுக்குத்தக்கமரியாதை செய்தனன். பார்த்தான்துஷ்டகேது இவளுடைய குணாகுணங்கள் ஒன்றும் விளங்கவில்லை இவளோ அரசனோடு நண்புடையவளாய் இருக்கின்றாள், இவ்விடமும் அரண்மனையாகவிருக்கின்றது இருந்திருந்து பார்ப்போமென்று சிந்தித்து மௌனமாக விருந்துவிட்டான். அரசனானவன் செங்கமலத்தினுடைய வேண்டுகோளினால் இவனுக்கு அரண்மனையில் ஓர் உத்தியோகம் கொடுத்து அவன் வசித்தற்கு வசதியான ஒருமாளிகையையும் கொடுத்தான். செங்கமலமானவள் பகிரங்கத்தில் அரசனுக்குப் பட்டமகிஷியாயும் அந்தரங்கத்தில் துஷ்டகேதுவுக்கு ஆசைநாயகியாயும் இருந்து வருகின்றாள், இப்படிச் சிலநாட்கழிந்தன.

கமலாம்பிகையானவள் ஒருநாள் சேடியர்களோடு நந்தனவனத்தில் வந்து சிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துநேரம் விளையாடித்திரும்பும் பொழுது துஷ்டகேது என்னும்பாதகன் அவளைக் கண்டு தீராமையல்கொண்டு தனது ஆசைநேசியாகிய செங்கமலத்தின் உதவியினால் அவளை விவாகஞ்செய்யலாம் என நினைந்து இராசகுமாரியாகிய கமலாம்பிகையை அரசனிடம் கூறித் தனக்குவிவாகம் செய்வித்துத்தரும்படி நெருக்கிக் கொண்டே வந்தான். அவளும் மறுத்துக்கூறினால் தனது அந்தரங்கம் வெளிவந்துவிடுமெனப்பயந்து அவன்வார்த்தைக்கு மாறுகூறாமல் "விவாகம் செய்வித்து வைக்கின்றேன்" என்று வாக்குக் கொடுத்திருந்தாள். இது விஷயந்தான் பூஞ்சோலையில் ஒரு ஆடவனும் பெண்ணும் வார்த்தையாடிக்கொண்டிருந்தனரென்று முன்னரே நாம் கூறியது.

செங்கமலமானவள் அன்று துஷ்டகேதுவுக்கு உத்தரவுகொடுத்துவிட்டு அரண்மனைக்குச்சென்று தனது பள்ளியறையிற் போய் சயனித்து மன ஆறுதலின்றி யோசித்துக்கொண்டு கூறுகின்றாள்.

ஆ! என்விதியே; நான் இராசகுமாரியாகப்பிறந்தும் எளிய போகம்விற்கும் தொழிலைத் தந்துவிட்டனையே, தாசித்தொழிலினால் பணவருவாய் அதிகம் வருமென்றெண்ணி இவ்விழிதொழிலைப் பழக்கிப் பணவாஞ்சையைக்காட்டிவிட்டவள் என்னைச் சிறுபராயத்தில் களவாடிக்கொண்டுபோய்வளர்த்த தாசி கற்பகவல்லி அல்லவா. பிற்காலத்தில் நானும் பொருளாசையாகிய சமுத்திரத்தில் மூழ்கிக் கரைகாணாதபடி இராசாக்கள் ஜமீன்தார்கள் பிரபுக்கள் உத்தியோகஸ்தர்கள் பணக்கார வாலிபர்கள் ஆதிய பல்லோரை மயக்கிவசப்படுத்திப் பாஷாணம்வைத்துக்கொன்றேன். வசியமருந்துகொடுத்து நான் ஏவும் குற்றேவல்களைச் செய்துழன்று பரதேசிகளாகும்படி செய்தேன் ஐயகோ! நான் எந்தக் காலங்களிலாவது மனச்சந்தோஷம் அடைந்ததுண்டா இல்லை இல்லை என்னைக்கெடுத்த கற்பகவல்லி என்னும் வேசியானவள் பணமில்லாதவர்களாயிருந்து அழகில்மிகுந்தவர்களாய் என்னை விரும்பிய ஆடவர்களையெல்லாம் என்னிடம் வராவண்ணம் துரத்தினாள். ஒருவரிடத்திலாவது உள்ளன்பாய் இருக்கக்கூடாதென்று என்னை இடையீடின்றி உபத்திரவப்படுத்தி என் சுயபுத்தியை மாற்றி வேசிக்குணத்தைப் பசுமரத்தாணிபோற் பதியச்செய்துவிட்டனள். அக்காதகி இறந்தபின்னர்த் தானே, நான் யாதொருவருடைய கட்டுப்பாடுமின்றி என்னுடைய எண்ணப்படி அக்கானகத்தைத் திருத்துவித்து அலங்காரமாளிகைகட்டி ஓர் இராசகுமாரியைப் போல இருக்கும்பொழுது இம்மன்னவனை வசப்படுத்தி இந்நாட்டில்வந்து இவனது பட்டத்தரசியானேன். அதற்கிடையூறாக இந்தத்துஷ்டகேது வந்து பலவிதமான இம்சைகளையெல்லாம் செய்கின்றான் அதுவுமல்லாமல். அற்புதவுல்லாச மனோகரியாகிய கமலாம்பிகையைத் தனக்கு விவாகஞ்செய்துதரும்படி துன்பப்படுத்திக்கொண்டுவருகின்றான். நானும் ஆகட்டும் ஆகட்டுமென ஏமாற்றிவருகின்றேன் என்னுடைய மாயவலைக்குட்சிக்கி அகப்படாதவன் இவன் ஒருவன்தானே. "ரோஜாப்புஷ்பமாலையைக் குரங்கின்கையிற் கொடுத்தாற்போல" இந்த விழுபிணந்தானா அவளுக்கு நாயகன். சிச்சி! இது என்ன அனியாயம்! என் மனச்சாட்சி தடுக்கின்றதே சாதுரியவார்த்தைபேசி எத்தனைநாளைக்கு ஏமாற்றுவது. நான் ஏமாற்றுகிறேனென்பதை அவன் அறிவானாயின் என்கதி அதோகதிதான். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" ஏதொருகருமமும் பிரயாசைப்பட்டால்தான் இனிதுமுடியும் நான் இராசகுமாரியைக்கண்டு துஷ்டகேதுவினுடைய குணாதிசயங்களை ஒன்றைப் பத்தாகப் புழுகுவேன் அவள் என்னுடைய தந்திரோபாயத்துக்கு எடுபடமாட்டாளா? பார்ப்போம் அவள் இணங்கினாற்சரி இல்லாவிட்டால் அரசனைக்கொண்டு குறித்தகருமத்தை முடிப்பேன். எங்களிருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையுந்தப்பி இவள் எங்குபோகப்போகின்ருள். என்னுடைய பலவிதமான உபாயங்களினுலும் முடியாவிட்டால், எனக்குக் கைவந்த தொழில்தான் இருக்கின்றதே அதனுல் அவளையே கொலேத்துப் போடலாம் என்றுபலவாறு கூறி நித்திரைபோயினுள்.

### ஏழாம் அதிகாரம்.

இராசகுமாரியாகிய கமலாம்பிகையானவள் தன்னுடைய துன்பத்தைநீக்கிக்கொள்ளும் வழியை அன்ருெருநாட்சேடியருடன் ஆலோசித்துப் பிறிதொருநாட்டவனை வைத்துச் சென்றனள் எனக் கூறினேமல்லவா? அப்படியே இன்னுெருநாள் ஆலோசித்து தனது மாமன் மகனுக்குக் கடிதம் அனுப்பி உதவிபெற்றுக்கொள்வதெனத் தீர்மானித்து ஓர் கடிதம் எழுதித் தனது செவிலித்தாயாகிய அகிலாண்டத்தினுடையமகன் சுமுகன் என்பவனிடம் கொடுத்து நேபாளதேசத்திற்கு அனுப்பிவிட்டனள். அவனும் பதினைந்துநாட்பிரயாணம்செய்து நேபாளதேசத்தையடைந்து அரண்மனைவாசலிற்போய் வாயிற்காவலனைக்கண்டு வந்தனம்செய்து நின்ருன்.

அப்பொழுது:—

காவலன்:—மித்திரரே! தாம் யார்? நீர் இருக்கும்தேசம் யாது? உமதுநாமம் யாது?.

சுமுகன்:—ஐயா! நான் ஒருதூதுவன். வசிக்கும் ஊர் பக்ஷித்தடாகம். என்பெயர் சுமுகன்.

காவலன்:—தாம்இங்கு எதற்காகவந்தீர்?

சுமுகன்:—இராசகுமாரருக்கு நமது நாட்டிலுள்ள ஒருசினேகிதர் ஒருகடிதம் தந்திருக்கின்ருர், தாம் தயவுசெய்து அவரிடம் என்னைச் சேர்த்தல்வேண்டும் என்றனன்.

காவலன்:—சுமுகனை இளவரசராகிய கருணுகரர் இருக்கும் இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்விட்டு வெளியேபோயினுன் சுமுகன் வந்தனம்கூறி அவனிடம் கடிதத்தைக்கொடுத்தான். அவன் கடிதத்தைவாசித்துப்பார்க்கும் பொழுது பின்வருமாறு வரையப்பட்டிருந்தது

கடிதம்.

சீர்கோண்ட பக்ஷித்தடாகத்தில் வாழ்கின்ற
ஜெயவீர விக்ரமன்றன்
செல்வக் குமாரிகம லாம்பிகைப் பேயரினுள்
சிறப்போடு விடுத்த நிருபம்
ஏர்கெண்ட நேபாள தேசசக்கிரராதிபதி
இனியசகதேவர் குமரா
ஈடிலாமன்மதக் கிரீடிகருணுகரா
என்னுசைமன்ன காண்க
வார்கோண்ட தனபாரமங்கையெம்சிற்றன்னை
வசியமாகத் தந்த தோர்
மால்தருமருந்தினு லென்தந்தைவயலாக
மாப்பிளை குறித்துவிட்டார்
நேர் கோண்டநம்மிருவர் சிறுபராயட்பேச்சை
நினைவினிலிருத்தி யிந்த
நிமிஷமேவந்து நீ ராதரிக்காவிடி
னிலேத்திடா தேன்றனுயிரே.

வரும்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணுர்பண்ணை.

## பெண்கள் கல்வி.

எமது சகோதரிகளே.

பெண்ணென்பது பெரும்பான்மையும் பெருமையுடையதன்று. உயர் குடிப்பிறப்பினை நோக்காது, நிறையுடையதன்று, ஆயிரமுகங்கொண்டு செல்லும் மனுேகதிகளையுடையது. எண்ணிபத்தைக்கையின்கண் நல்கின். இந்திரன் மகளேயாயினும், அவள் தீயிடை வெண்ணெயேபோல. உருகிக் கற்பென்னும் கலங்காநிலைமை மெலிந்துபோக, அவன் வழிப்பட்டு நிற்பாள் என்று சான்ருேர் அநுபவத்திற்கண்டு கூறியிருக்கின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் நம்மைப் பொருளாசை வந்து கவர்ந்து கொள்ளாது காத்துக்கோடலே முதன்மையுடையது. தன்னாற் காதலிக்கப்படும் பொருளைப் பிறரறியாது அடைதல் வேண்டும்; பிறரறிவராயின் இவர்க்கு இதன்பால் காதலுண்டு எனக்கண்டு அதன்வழியால் நம்மைத் தம்வசப்படுத்திக் கேடுசூழுதற்கே துவாகு மாதலினால்.

தமது உடல், பொருள், ஆவி மூன்றனையும் நாயகனுக்கே ஒப்புவித்துவிட்டுக் கற்புநிலையிற் பற்றிநிற்பது மகளிர் கடன் என்பதனை அறிந்திருந்தும், பொருளாசைகாரணமாக, நஞ்சசோதரிகளுட் சிலர், இவை நாயகனுடையன, இவை எம்முடையன எனவகுத்து நாயகனால் நல்கப்படுவனவற்றை நன்குபேணி அவன் வருவாய்க்கியைய அழியாது செல்லும் வழியாற் செல்வன சென்றொழிய விடுத்து, தமது மனக்கருத்தைப் பிறரறியக் காட்டி நடந்துவருகின்றார்கள்.

இனித் தமது சீதனப்பொருள்களினால் வரும் வருவாயினை வேறுறத்தாமே கொண்டு, சேர்த்து ஒரு முதலாக்கி, அத்தொகை தம்முடையதெனப்பலபெருமிதமொழிகளைப் பலரோடும் பிதற்றித்திரிகின்றார்கள்.

இவர்களியல்பினைக்கண்டே "மனையவள்கொணர்ந்த வான்பொருளை, இன்னுயிர்விடுக்குமெனக் கொடுந்துயரமெய்தினு மீந்திடலாகா" என்று பெரியாரும் பணித்தார்.

வேறுசிலர் வேண்டியவளவினும் மிகப்பக்கூறி வாங்கி, அதனை உலோபித்து, தந்தைதாயர் அயலார் என்றின்னோர் செய்துதரும் வஞ்சகவுதவியினால் விற்று, தேனீபோலச் சிறுபொருளீட்டிவருகின்றார்கள்.

எவ்வாற்றானும் தாம் பொருளாசைமேற்கொண்டு அதனை மற்றையோரறியவுங்காட்டி ஈட்டிய அப்பொருளைக் கரந்து காப்புறப் பிறர்பாற்கொடுப்ப அவர் வாயிலாக, ஏனை ஆடவர்களுமறிந்து இவளுடன் சொல்லாடக் காலம்பெற்று இவள் மனநிலையும் கருத்தும் பொருள்வயத்ததே என்பதை அறிந்து அப்பொருள்கொண்டு நல்லறிவின் உறுதிநிலையினை மென்மெலப் பெயர்த்துக் கற்பழிகளத்திற் போர்க்கறைகூவுவரேல், பொருள் வயப்படாா கற்புநிலை எத்துணை உறுதிப்பாட்டினையுடையதாயினும், கலங்கி ஒழிந்துபோக, தோல்வித்தானமடைந்து மெலிந்து நல்லியலழிகின்றார்கள்.

இந்நெறியினாற் சிறுபொருளீட்டி வேறறலாற் குடும்பத்தில் வறுமைவந்து குடிபுகாநிற்கும். அதுவரவே தனக்கும் நாயகனுக்கும் நீராக்கலகங்களை விளைவிக்கின்றது. இதனைநோக்கியே,

வறுமைமகிழ்வாங்கடலைவாட்டும்வடவை
வறுமைகணவன்மனைவிக்—குறுபகையாந்
நீராக்கலகம்பலவிளைக்குந்தீமையெலாம்
பேராதுறைவிடமாம்பின்.

என்று மூதறிவாளர்கள் கூறுவாராயினார்கள்.

இவைகளை எல்லாம் நாயகனறியின், செய்திருந்த அன்புகுறைவுபட்டு மனம் பொருத்தமிலையாய்விடும், விடவே இருவருமோரிடத்திருத்தல்,

"உடம்பாடில்லாதவர்வாழ்க்கைகுடங்கருட்
பாம்போடுடனுறைந்தற்று." என்றவாறாய் முடிகின்றது.

இத்துணையும் கூறிப்போந்தவாற்றால், சிறுபொருளீட்டம் தொடங்குங்கால் இன்பமாய்த் தோன்றினும் இறுதியிற்பெருந்துன்பினை உழப்பித்து, குடும்பகலகவேதுவாகி இம்மையிற் கற்பினை இழப்பித்துப் பழிபாவங்கட்காளாக்கி, மறுமையில் நரகத்துன்ப மருத்துவிக்கும் பெரும்பகை என உணர்ந்து அத்தீயகுணம் தன்னைச் சாராது பாதுகாத்தொழுகும் மகளிர் எவராலும் தலை நிலத்துவைத்துப் போற்றப்படுவர்கள் என்றுணர்க.

அன்னபூர்ணேஸ்வரி.

## புத்தக வரவு.

### கமலாக்ஷி.

இஃது செந்தமிழ்நடையில் எழுதப்பட்டு இப்பொழுது வழங்கிவரும் கற்பனசரித்திரங்களுள், இதனை ஒப்பன, சிலவினுஞ்சிலவாம். அறநெறிப்பட்ட அறிவினைப் பெற்றுள்ளபண்டிதர்களுக்கும் பெறமுயலும் மற்றையோர்க்கும் பயன்படுவது. இதில் அன்புடைமை, பொறையுடைமை கற்புடைமை முதலிய நற்குணங்கள் காலம் பெற்று ஆண்டாண்டு கதை வாயிலாக வேண்டிய அளவு அமைவுற விளக்கப் பட்டிருக்கின்றன. குடும்பங்களில் நிகழ்ந்து வருவன வற்றையே எடுத்துக்காட்டி, விஷயங்களை வேண்டுமிடங்களில் தழுவியும், கண்டித்தும் ஆண்பெண் இருபாலாரையும் நல்லொழுக்க வழிப்படுத்தும் மாட்சிமை வாய்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்திக மதத்தினரும் மறுத்துரை யாடா வகை, சுருதி, யுக்தி அநுபவங்களால், வேதாகமங்களின் தத்துவார்த்தத்தை, விளங்கவைத்திருக்கும் சாதுர்யமும், செம்மொழிச் சிலேடைவகையில் இரட்டுற மொழிய நின்ற சொற்றொடர்களும் பிறவும், நூலாசிரியர்களது ஞானசாஸ்திர உணர்ச்சியினையும் புலமையினையும் நுண்ணிய அறிவின்பெருக்கையும் காட்டாநிற்கும். கதைகளுக்கேற்ப, வேண்டும் சித்திரப்படங்களும் சேர்க்கப்பட்டிக்கின்றன.

இந்நூல் இரண்டாம் பதிப் பாதலினுல் முன்னரே, நூலினியல்பினை, தமிழுலகினர் நன்கு அறிவராதலின், இவ்வாசிரியர் இயற்றிய,

"வியஜசுந்தரம்". என்னும் புதிய நூலிற்கு எழுதிய வாறுபோல, விரித்து எழுதாது விடுத்தாம்.

இவ்விழுமிய நூலினை இயற்றியவர் இரங்கூன் பேப்பர் கறேன்ஸி ஆபீஸ் போக்கிஷதாரர் திரிசிரபுரம் ஸ்ரீமான். ராய்சாயிப்

ம போன்னுச்சாமிப்பிள்ளை அவர்கள்.

விலை. 2—8.

---

## மனிதர் வமிசாவளியின் உண்மை.

இது ஆங்கிலேயபாஷையிலே அந்நிபிஸண்டு அம்மையார் செய்த ஒரு பிரசாரணத்தின் மொழிபெயர்ப்பாயுள்ளது. இதில் ஜீவாத்மதத்துவவிகாசமுறை தூலதத்துவ விகாசமுறை, விஞ்ஞானதத்துவ விகாசமுறை, மானிடவர்க்கங்கள் ஜாதிகள் ஆகிய இவைகளின் வரலாறும் உற்பத்திக்கிரமங்களும் மிகநுட்பமாகக் கூறப்படுகின்றன. தீபங்களையும் கோளங்களையும், யக்ஷாக்ஷியிதிரர் முதலாயுள்ள தேவர்களின் வரலாறுகளையும், புவனண்டங்களின் முறைகளையும், அவ்வவற்றின் தத்துவங்களையும், கிரமமாகவும் விரிவாகவும் விளங்க காட்டலால், இதுஎவர்க்கு முபயோகமாகுமொருதத்துவநூல். விலை—அணு அ.

இதன் ஆசாரியர் பூரணசந்திரோதய பத்திராதிபர் பிரமஸ்ரீ. ப. நாராயணஐயர் B. A. B. L. F. T. S. அவர்கள்.

## சிற்றம்பலநாடிகள் சாத்திரக்கோத்து.

இது எவர்க்கும் மறுமையின்பேரின்பநலந்தரும் ஞானசாஸ்திரமஞ்சரி. எனினும் எவர்க்கும் செவ்வனே விளங்க இயற்சொற்களால் தத்துவார்த்தங்களின் உள்ளுறைகளை இலகுவிற்பொதிந்து மலவாசனையினையும் அவாவின்வேரினையும், அடியோடுகளைந்து தூய்மைசெய்யும் இயல்பு வாய்ந்துள்ளது. குருவழிபாடு சரியையாதி நான்குபாதங்களினுண்மைகள். என்றற்றொடக்கத்தன விலைமதித்தற்கரியன.

இஞ்ஞானநூல், தமிழ்ப்பண்டிதரும், அரசினர்கல்விச்சாலைகளில்தஞ்சைசர்க்கில் இன்ஸ்பெக்டர் தலைமைலிகிதர். ஸ்ரீமான் சே சிவஞானம்பிள்ளை அவர்கள் விருப்பப்படி ஸ்ரீமத். நே. முருகேசமுதலியார் அவர்களால் அச்சிடப்பட்டது. இதனைப் பிழையின்றிச் சுத்தமாக அச்சிட்டு உதவிய ஷை முதலியாரவர்களின் உதாரசிந்தையும் ஞானசாத்திர பக்தியும் பெரியார்ப் பேணுமவர்சால்பும் பிரதியை நோக்குவார்க்கே புலனுகும். விலை—அணு 3.

---

## மாம்பழம்

இஃதோர் சிறந்தநூல்.

இதில், முப்பழங்களிற் சிறந்த மாம்பழத்தின் வரலாறும் மாமரபாகங்களும் அதன்சிறப்பும் காலநிலைமை இடம், நடும்விதம் குழிஎன்பவைகளைக்கூறும் உற்பத்தியும், அதன் சாதிவகைகளும் அவ்வவற்றின் பெயரும் ஒட்டுமாங்கன்றுகள் ஒட்டும்முறைகளும் அவைகட்குவேண்டும் மருந்துகளும் உபயோகமுறைகளும் பழம் பறிக்கும் முறைகளும் அதன் பழம் காய்களினுல் செய்து கொள்ளுதற்குரிய உப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகங்களும் அதன்பாற் றோன்றும் பூச்சிகள் கறையான் புழு முதலிய கெடுதிகளும் உண்டாகும் அவைகளைப்போக்குமாறும் இவைபோன்றபலவிஷயங்களும் இனியசெந்தமிழ்நடையிலே எழுதப்பட்டிருக்கின்றன.

மாந்தோப்பினால் பெரும்பயனடைந்து வருபவர்களும் ஒட்டுமாங்கன்று வியாபாரஞ் செய்து வருபவர்களுமாகிய நமதுநாட்டினர் இதனைத்தவறாது வாங்கி வாசித்தல்வேண்டும்.

இந்நூலை இயற்றியவர்கள் இக்காலத்திற்கு வேண்டப் படுவனவற்றுள் முதலாவதாகிய விவசாயவழியினால் உலகினர்க்குப் பேருபகாரியாகி விளங்குபவரும் பென்ஷன் விவசாய இன்ஸ்பெக்டரும் விலையுயர்ந்த "தென்னிந்தியவிவசாய" பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமான் இராசகோபால் நாயுடுகார் அவர்கள். இந்நூல் இதற்குவேண்டும் 12 சித்திரப்படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. (வரும்.)

விலை—அணா 7.

---

பிரசினோத்தர ரத்நமாலை.

இஃதோர் வேதாந்த சாரமான ஞானநூல். இதில், பிரபஞ்சலக்ஷணங்களும் சப்ததுவீபங்களின் நிலைமைகளும் நவக்கிரகங்களின் வரலாறுகளும் சாதனசதுட்டயங்களும், அஷ்டாங்கயோகங்கள் முதலிய யோகங்களின் திறங்களும் சிரவணமனனாதிகளும் பிறவிதுன்பங்கள் மூன்றும் சச்சிதானந்த வைபவங்களும் ஆனந்தலக்ஷணமும் மும்மூர்த்திகளும் மூலப்பிரகிருதிகளின் உண்மைகளும் பொருள்விளக்கங்களும் ஆகிய வேதாந்தசாரமான தத்துவங்களின் றன்மைகள் மிக இலகுவில் பெண்கள்முதல் எவர்களும் விளங்கிக்கொள்ளுதற் கேற்ற செந்தமிழ்நடையிலே எழுதப்பட்டு சிற்சில கதைகளோடுசேர்த்து வினாவிடைமுகத்தால் திரிபின்றி அறிவுறுத்தும் இந்நூலின்போக்கு கவிஞர்களின் மனதினைக்கவராநிற்கும்.

எத்தனையோ வேதாந்த நூல்களினாராய்வின்பின், பெறநின்ற தத்துவஞானத்தினை, இத்தனை லகுவிற் பெறும்படி, உபகரித்தியற்றிய நூலாசிரியர் கல்வியின்பயன் நம்மனோர்க் குபயோகமாக, அவர்பால் நின்ற இந்துசாஸ்திராபிமானம் எவரையும் ஞானானந்தத்தில் மூழ்குவிக்கும்.

இந்த ஞானமிர்தம், "சிரேட்டமாலிகா" "கல்லிடக்கும்மி" "இந்துசாஸ்திராபிமானி" "ஆரியஜனபோதினி" என்னும் நூல்களை இயற்றிய கல்லிடக்குறிச்சி. ஆரியசிரேட்டர் பிரமஸ்ரீ. வா. முத்துக்கிருஷ்ண ஐயரவர்களால் செய்யப்பட்டுப் பெருங் கொடைவள்ளலும், கர்ப்பஸ்ரீமானும், ஆகிய, கல்லிடக்குறிச்சி மகாகனம். பிரமஸ்ரீ. ரா. ச. அ. லக்ஷ்மணஐயர் அவர்களுக்குச் சமர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கின்றது.

இதன் விலை. அணா 10.

---

கைத்தொழில்போதினி.

முதற்பாகம்.

இது எந்தநிலையிலுள்ளார்க்கும் அத்தியாவசியம் வேண்டியதொருநூல். இதில் மசி (INK) யினங்கள், மரங்களுக்குப் பூசும் தைலங்கள் செய்யும் விதங்களும், உடைந்தகண்ணாடிகள், மரச்சாமான்கள், யானைத்தந்தம், இரும்புச்சாமான்கள். முதலியவைகளை ஒட்டும் விதங்களும், இரும்புச்சாமான்களின் துவாரங்களடைக்கும் முறைகளும், தங்கம் வெள்ளிப் பூச்சுகள் பூசும்முறைகளும், ஜர்மன் சில்வர் செய்யும் முறைகளும் உலோகசுத்திகளும், இரத்தினம், சரிகை, முதலியன சுத்திசெய்யும் முறைகளும், மெழுகுவர்த்தி விஸ்கோத்து முதலியன செய்யும் விதங்களும் . இவைபோல்வன நாற்பது முறைகளும் பிறவும், விரிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியதமிழ்நடையிலே எழுதப்பட்டு இ க்கின்றதென்றால், இந்நூல் கல்விவளர்ச்சிக்கேயன்றி, சிவஞானோபாயத்திற்குமின்றியமையாத்தன்மையுடையதாகும். இவ்வளவில் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பிழைக்கும்வழியினை மேற்கொள்வார்கள் என எண்ணுகின்றோம்.

இச் சிவஞானோபாயநூலினை இயற்றியவர்கள் கான்பூரைச்சேர்ந்த மாஸ் வான்பூரைச் சனனதேசமாகக்கொண்டு, இப்பொழுது கொழும்பில் வசிக்கும் ஆபுள்வேதபண்டிதரும், வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் முதலிய வற்றிலும், தமது சுயபாஷையிலும் மகாபாண்டித்தியமுடையவரும், பிராமணகுலோத்பவருமான மகாராச பிரமஸ்ரீ. கங்காப்பிரசாத பண்டித ரவர்கள். பர்வததீபமேபோன்ற இவர்களைப்பற்றி நாமெழுதிக்காட்டவேண்டியதின்று.

விலை. 1 ரூபா 8 அணா

---

மணிமறையமுத்துத்தோன்றி.

ஐயா, ஞானப்பிரகாசப் பத்திராதிபரவர்களுக்கு இக்கடிதத்தை தங்களின் கௌரவம் பொருந்திய ஞானப்பிரகாசப் பத்திரிகையில் சனங்களின் நன்மைக்காகப் பிரசுரிக்குமாறு கேட்கிறேன்.

1911 - ௵ ஜனவரி ௴. 26 - உ வெளிவந்த கௌரவம் பொருந்திய குருசந்திரோதயப் பத்திரிகையில். கெங்காப்பிரசாத் பண்டிதருடைய கேள்விக்கு விடையென முகவுரையிட்டுக் கூறியிருக்கிறதையான் கண்ணுற்றேன்.

இவ்வித அசத்தியவசனங்களைக் கூறியிருக்கிறார். அஃதெவ்வாறெனில் ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போலாம்; ஆகையால் நமக்கு வீண் வசனங்களை எழுத ஆவசியக மில்லாததினால் சாஸ்திரப் பிரமாணத்தோடு நீரெழுதிய விடைக்குக் கண்டனம் கீழ்ச்சுட்டும் வசனத்தநால் விளங்கும்.

நீர் கூறுகிறீர் வியாதிகளில் பிரதான முடையது குருநோயென்று சொல்லப்பட்ட வைசூரியேயாமென்றும் வியாதிளிற் பிரதான முடையதாயிருக்கிறதற்குக் காரணம் அதிமேக மேயாமென்னவும் கூறுகின்றீர்-இவற்றிற்குக் கண்டனம்.

சுரவரோகஙகட்கும் சுரமோராசன்

சுலோகம்

சிவன்சொல்லுகிறார்.

தேயெந்திர மானஸ பிசபே ரோரு வஷி சுரு ஆ ஆ பிரதானம் ரூருகணம் முத்தோ பகவதாபுரு சன மாதன நிதனேரஞ் சஙபகதி அரண சஞ்சயா அந்தாசாவே விகாரணம்சுரு ஜாபிரகிரிதா.

(இதன்பொருள்) சுரம் சரவரோகஙகட்கு ராசன் சர்வபிராணிகளின் பிராணன்களும் அரனேவாலா. அதாவது சர்வபிராணிகளின் உயிரைக்கவர்ந்தெடுக்கக் கூடியவன். அத்திரபயானக அதாவது மெத்தப் பயஙகரமுடையவர் அவற்றிற்காய் அனேக இந்திரியஙகளோடு சுரத்திற்குச் சாந்திசெய்வதற்காய்ச் சிட்சைகள் செய்தல் வேண்டும்.

சுரமானது சரீரம் இந்திரியம் மனம் இவைகளைப் பொஙகப்பண்ணுகின்றன. சர்வவியாதிகட்கும் சுரம் அரசனும் பலவானும் சிரேட்டமுடையனும் இருக்கிறார். சாக்ஷாத்பகவானாகிய சிவன். இவ்வாறுபூர்வமாய் திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார். இதுமாத்திரமல்ல விஷ்ணுஅவதாரமாகிய காசிமகாராஜா தனவந்தரிபகவான் கூறியிருக்கிறார்கள். சர்வவியாதிகட்கும் சுரமே ராஜன் என்றும் மகாமுனிவர். சர்க்முனிவர், பிறதுபாகபட்டார், மகராஜாபவோமாஸ்ரமுனிவர். முதலானோர்கள்கூறியிருக்கிறார்கள். சர்வவிதிகட்கும் சுரமே பிரதானமென.

பிராணிகளின் ஜென்மத்திற்கு முன்னரும், மரணமடையும் தருணமும். ஆவசியகமாய்ச் சுரமுண்டாகின்றன, அதனாலன்றோ.

சுரத்தை அரசனும்: பலவானும்: சிரேஷ்டமுடையதாயும் கூறியிருக்கிறார் சுரம் சர்வரோகஙகட்கு முன்னரே உற்பத்தியாகிறது மரணிக்கும் தருணத்தில் சுரமிருக்கிறது சுரமிருக்கும்சமயம் மாத்திரம் வைத்தியர்கள் ஔஷதப்பிரயோகம் செய்கிறார்கள். சுரமில்லாவிடில் யாவரும் மனததயிரியம்விட்டு வியாகூலப்பட்டுச் சிட்சைகள் செய்யாது கைவிட்டுவிடுகிறார்கள். அதுமாத்திரமல்ல பிராணனும் தனது கூட்டைவிட்டுப் பயணப்பட்டுவிடுகிறது.

(வரும்.)

இஙஙனம்,

பிரம்ம ஸ்ரீ.

ம. கேங்காப்பிரசாத் பண்டிதர்.

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாசாரம்.

உடைதலில்லாத கண்ணுடி:—பிரான்சிலே, பக்காருற்என்னுமிடத்திலே, உடைக்கப்படாத கண்ணுடியொன்றினைச் செய்ய ஒருவர் கண்டிருக்கின்ருராம்.

சீனர்களின் பிரேதகிருத்தியம்:—சீனருடைய பிரேதத்தோடு ஒருகோழிக்குஞ்சு சில இறைச்சித் துண்டங்கள், ஒருகூடையில் அரிசி, காய்கனிகள், ஆகிய இவைகளையும் குழியில்வைத்து, விஸ்கி என்னும் குடிவகைப்போத்தலொன்றை உடைத்து, பிரேதப்பெட்டிமேலூற்றி மூடும்பொழுது சுற்றத்தவருட் சிலர் மெழுகுதிரிகளையும் விளக்குக்கூண்டுகளையும் கொளுத்திப்பிடிப்பார்களாம். குழியில் இடும் உணவுப்பொருள்கள் மறுஉலகிற்குப்போகும் அளவிலும் இறந்தவனுக்கு ஆகாரத்தின்பொருட்டும் தீபங்கள் செல்லும்வழியில் இருளின்றி இருத்தற்பொருட்டும் என்பது அவர்கள் கொள்கை.

பெரியரயில்வே:—இங்கிலாந்திலே கிளாப்ஹாம் என்னும் ரெயில்வே ஜங்ஷனிலே ஒருநாளைக்கு 1,400 றெயில்வே வண்டித்தொடர்கள் வந்து போகின்றனவாம்.

அல்மீனியக்காகிதம்:—ஜர்மனியிலே, அலுமீனியத்தாளை,காகிதத்திற்பூசித் தகரத்தட்டங்கள்போல் பாவிக்கப்படுகின்றன.

சிசுமாம்ஸபக்ஷணம்—பம்பாயிலேநாஷிக்ஜிலாவிலே உமைஎன்பவள் ஒருத்தியின் பத்துமாசத்துப் பெண்குழந்தையைக் கொன்று தின்ற குற்றத்திற்காக மரணதண்டனைவிதிக்கப்பட்டாள்.

குயிலொலி—ஜெர்மனியிலே குயில் முதல்முதல் கூவுதலைக்கேட்பின் புற்களின்மேற்படுத்துப் புரளுவார்கள் அவ்வாறுசெய்வது அவ்வருடமுழுவதும் இடுப்புப்பிடிப்பு இப்புவலி முதலிய உபத்ரதிவங்கள் வாராதிருத்தற்பொருட்டாம்.

மிஸ்டர் மான்ஸ் ஜலலஸ்டிக் என்பவர், போனேபிளேன் என்னும்யந்திரத்தைக் கொண்டு சென்னை ஐலண்டுமைதானத்தினின்று காலை 6-30 மணிக்குப்பறக்கத்தொடங்கி சென்னையிலே பலவிடங்களுக்கும்பறந்து சென்று 8 மணியளவில் புறப்பட்டஇடம் வந்துசேர்ந்தனராம்.

"இந்தப்பொய்கந்தபுராணத்திலே" என்பார் இதற்குயாது கூறுவரோ.

ஓர்தெய்வீகமாகிய புளியமரம்—திருநெல்வேலியைச்சேர்ந்த ஆழ்வார்திருநகரிலே கோயிலினுள்ளே ஒருபுளியமரமுண்டு உறங்காப்புளி என்பது அதன்பெயர் மூன்றுமரம்போற் பிரிந்திருக்கும் பூத்துக்காய்ப்பதே அன்றிப் பழுப்பதில்லை அதிலே அக்கினிபட்டால் கொப்புளங் கொண்டு கெட்டநாற்றமுடைய செம்மையும் வெண்மையும் கலந்த நீர்வடிகின்றது சந்தனமரைத்தப்பினுல் அதுநின்றுபோமாம் இவ்விருக்ஷம் பூசிக்கப்பட்டுவருகின்றது.

பராக்கிரமசாலிகள்—ஸ்ரீவெங்கடசாமிநாயுடு அவர்கள் 25-3-11 இல் பிரதமகவுரவகியாயாதிபதியும்முனிசிபல்கமிஷனரும் ஆகியஸ்ரீமான் இராய்பகதூர் பெ. மா. மதுரைபிள்ளை அவர்கள்சமுகத்தில் கூடிய ஏறக்குறைய 2000 சனங்களுக்கு எதிரில் 4000 ருத்தல் பாரமுள்ள பெரியகல்லை வைத்து தமதுமார்பிலே நால்வர் சம்மட்டியாலடித்து உடைக்கும்படி இருந்தும் பின் அதனைவிழுத்திஎழுந்தபின் இருதோளிலும் பூட்டப்பட்டிருந்த இரும்புச்சங்கிலிகளை அறுத்தும் ஒன்றேகால் அங்குலகனமுள்ள இரும்பினைவளைத்தும் முழுதும் சனங்கள் ஏறிய இருநாட்டுவண்டிகள்மார் பின்மேலேறிப்போகவிமிர்ந்துபடுத்திருந்தும் மோட்டார்வண்டியை இழுத்து நிறுத்தியும் செய்த பராக்கிரமங்களுக்காக நீதிபதியவர்கள் ஓர்தங்கப்பதக்கம் பரிசளித்தார்கள் இவர். ஸ்ரீராமமூர்த்தியின்பின் தோன்றிவிளங்குபவர்

குமாரசுவாமிப்புலவர் புலவகரம் மயிலணி : சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதந்திஆபீசு—யாழ்ப்பாணம் தபாற்கந்தோரிலிருந்து வண்ணார்பண்ணைத் தபாற்கந்தோருக்குத்தந்திக்கம்பி பூட்டப்படுகின்றது.

கடனுக்குப்பெண்ணைவிற்றல்—:பூனாவில், பதினாறு வயதுள்ள ஒருபெண்ணை, அவன்தகப்பன், ஒருமகமதியனுக்குக் கொடுக்கவேண்டிய (அ) ரூபாவுக்காக விற்றுவிடத்தீர்மானஞ்செய்யப்பட்டதென்றும், அதனை அறிந்த "குழந்தைகள் சம்ரக்ஷணசங்கம்" அதனைத்தடுத்துவிட்டது என்றும் அறிகின்றோம்.

மதுபானவேட்கைக்குபாயம், சீமைஇலந்தைப்பழம்—:மதுபானவேட்கை அப்பிள் எனப்படும் சீமை இலந்தைப்பழத்தைச் சாப்பிட்டால் தணிந்துபோமாம்.

நூதனசிருட்டி—:வில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியமெனப்படும் நகரிலே, ஒரு எருமைக்கு ௬ முலைக்காம்புகள் இருக்கின்றனவாம்.

கற்குளைப்பொன்—:வைஜாதிருபாக்கத்தை அடுத்தகோல் கொண்டாவிற்குச்சமீபமாயுள்ள பாபு என்னும் நகரிலே ஒருவர் செங்கற்குளை வைத்துவிட்டு, இரண்டுவாரம் கழிந்தபின், பார்க்கும்பொழுது, அக்கற்கள் பொன்னிறமாகயிருந்தனவாம். நமது சமயகுரவர்களை ஞாபகப்படுத்துகின்றது.

ஏற்றவிவாகம்:—பிரான்சிலே, சிறைச்சாலையிலே மனைவியைக் கொன்ற குற்றவாளியொருவன், மாமியைக்கொன்ற குற்றவாளியாகிய ஒருத்தியை மணஞ் செய்து கொண்டனனும்.

பெண்கள் கல்வி:—8. பெண்கள் புனாவிலே, மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சித்தியடைந்தனராம். பிரான்சிலே, 600 பெண்கள் கலாசாலையிலே படித்துவருகின்றனராம்.

கைதைநகர்

வீரகத்திவிநாயகராலயமகோத்ஸவம்.

இவ்வாலயத்திலே இம்மாசம் 21-ம் திகதி உற்சவம் ஆரம்பமாகி 30-ம் திகதி ரதோற்சவ தீர்த்தோற்சவங்கள் நடைபெறும். அறிந்தவரையில் இப்பொழுது இலங்கையிலே இவ்வாலயத்திலும் வல்வையிலுமே கைலாசவாகனதரிசனப்பேறு அடியார்க்குக் கிடைக்கின்றது.

வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலை
காவியபாடபரீக்ஷை

இவ்வித்தியாசாலையில் பாரதம் இராமாயணம் கந்தபுராணம் முதலிய இலக்கியங்களும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும் பரீக்ஷிக்கப்படுகின்றன. வித்யாதரிசி சிறீமான். சி. தில்லைநாயகம்பிள்ளை அவர்கள் பரீக்ஷைநடத்துகின்றார்கள்.

சைவப்பிரசங்கம்.

சென்ற 11-ம் உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், புரோக்தர் சங்கரப்பிள்ளையவர்களுடைய, மானிப்பாய் இந்துக்காலேஜில் சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவரவர்களாலும் ஸ்ரீ வ. மு. இரத்தினேஸ்வரஐயர் அவர்களாலும் சைவப்பிரசங்கஞ்செய்யப்பட்டது. பேசப்பட்ட விஷயங்கள் மனவாக்குக்காயங்களாலாகியபாவபுண்ணியங்கள். உதாரணங்களாகப் பலசரித்திரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

நெடுந்தீவுச்சைவப்பிரகாசவித்தியாசாலை.

நெடுந்தீவிலே சைவசமயிகள் பலர்சேர்ந்து அவ்வூரிலே கிறிஸ்தவபாடசாலையேயன்றி சைவவித்தியாசாலையில்லாமையால் ஓர் சைவப்பிரகாசவித்தியாசாலை அத்தியாவசியகம் வேண்டுமென்று தாபித்தார்கள் இப்போ அவ்வித்தியாசாலை தாபிக்கப்பட்டு ஒருவருஷகாலமாக நடைபெற்றுவருகின்றது இதை அவ்வூரிலுள்ள சைவசமயிகளாலே கிரமமாக நடத்திவருவதற்குப் போதிய முதலில்லாமையால் முயற்சிக்குறைவாக இருக்கின்றது குறித்தவித்தியாசாலை சைவசமயிகளாகிய நம்மவர்களுக்கெல்லாம் தமிழ்கற்கவும் சமயபாடங்கற்கவும் அத்தியாவசியகம் வேண்டற்பாலதொன்றேயாம், ஆதலின் இவற்றையெல்லாம் நமது சைவசமயிகளாகிய யாவரும் நன்கு சிந்தித்து நமது நாடுசிறப்புற்றோங்குவதற்கு நன்னிலைப் படுத்தப்படவேண்டுமென்பதை உணர்ந்துஇயன்றபொருளுதவிபுரிவார்களென்று எமது முழுநம்பிக்கையேயாம் ஆதலின் இவ்வித்தியாசாலையானது எக்காலமும் மேலோங்கவும் வேண்டுவார் வேண்டியதை ஈந்தருளும் பெருங்கருணைத்தடங் கடலாகிய சிவபெருமான் திருவருள் புரிவாராக.

நா. கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயண சிவபரத்துவம்.

### தாடகைவதைப்படலம்.

"திங்கண்மேவுஞ்சடைத்தேவன்மேன்மாரவேள்
இங்குநின்றெய்யவுமெரிதரும்நுதல்விழிப்
பொங்குகோபஞ்சுடப்பூளைவீயன்னதன்
அங்கம்வெந்தன்றுதொட்டனங்கனேயாயினான்.

"வாரணத்துரிவையான் மதனனைச்சினவுநாள்" எனவருஞ் செய்யுள்களிலே காமதகனமும் கயமுகாசுரவதமும் ஆகிய சிவபெருமானுடைய கோபப்பிரசாதங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா னுணர்வுமேன் முடுகினாறிவுசென்
றுற்ற வானவனிருந் தியோகுசெய்தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் தூய்மையே. (௩)

இதன்பொருள். இருவகைப்பற்றுக்களும் அவாவும் அற, பிறவி சென்றொழிய. மெய்யறிவுமேலிட்ட ஞானியர்களது உணர்விலே சென்று தியானப்பொருளாகி விளங்குகின்ற சிவபெருமானே யோகஞ்செய்திருந்தனரென்றால், இவ்வாச்சிரமத்தின் தூய்மை சொல்லப்படும் அளவினையுடையதாமோ என்க. வானம்—ஞானாகாசம். இச்செய்யுளினால். சிவபெருமானே ஆன்மாக்களுக்குப் பிறவிப்பிணியினை ஒழித்து வீடுபேறருளும் முழுமுதற்கடவுள் என்பது விசேடணத்தால் ஐயமின்றி விளக்கப்பட்டது. பிறப்பினை அஞ்சித் துறவுபூண்டு மெய்யுணர்ந்தார் அறிவின்கண்ணேயே அவர் வெளிப்பட்டருளுவர் எனவே ஏனையோர்போலக் கணக்குவழக்கொடு கத்துமதத்தார் பிணக்கின்கண் அவரகப்படார் என்றவாறாயிற்று.

"ஈரைம்பானூழிகாலம்" என்றாற்போலக்காலவரையறையின்றி "யோகுசெய்தனர்" எனவாளாகூறினமையினால், தம்மின் மிக்கதோர்பொருளைக் குறித்தன்று.பின்பெருந்தவத்தோர்க்கு,யோகுசேர்நிலைமை. சொல்லுந்தரத்தது அன்று ஆதலின் அது இனையதோர் தன்மையெனத் தாமேசெய்துகாட்டினர் என்பது விளங்கவைத்தவாறு கண்டுகொள்க.

செய்தனன் என்றொழியாது "எனில்" என்றவிதப்பானும் அவர்தூய்மையினை இடத்திலேற்றி "சொற்றவாமளவதோ" என்று முடித்தமையானும் ஆசிரியர் கம்பரது உள்ளக்கிடக்கையின் குறிப்பும் சிவபத்தியும் வெளிப்பட்டவாறறிக.

# பயிரிடும் சிலகுறிப்புக்கள்.

மாடுகளுக்குநல்ல சாரமான உணவு கொடுத்தால், எருவும் சாரமுடையதாகியிருக்கும். மாடுகளின் மலசலங்களும் அவைகள் உண்டுவிட்ட வைக்கோல் புல் முதலியனவும், வீடுகூட்டும் குப்பைகளும், சாம்பலும் எருவாகின்றன. சாணியை அதன்சத்து ஆவியாய்ப்போகாதபடி மேலே மண்ணிட்டு மூடிவைத்தல்வேண்டும். அல்லது குழிகள்வெட்டி அதனுள்ளிட்டு, வெய்யிலிலும் மழையிலும் கெடாதிருப்ப மேலே வேய்ந்துகொள்ளவேண்டும். இவ்வெருவுடன் எலும்புத்தூளைக்கலந்து உபயோகித்தல் மிகநல்லது நமதுநாட்டிலே தோட்டக்கரை யோரங்களிலும் வேலிகளிலும் எத்தனையடிஉயரப்புற்றுகள் வளர்ந்திருக்கின்றன அதனுபயோகம் தெரியாமையினாற்றான் ஒருவரும் கவனிக்கவில்லை. அப்புற்றுமண் தோட்டங்களுக்கு நல்லஎருவென்று அநுபவத்திற்கண்டு அநேகர் எழுதியிருக்கின்றார்கள் சப்பாத்துக்கள்ளி வேர் மண்ணும் எருவாகி நல்லபயன்தருகின்றதாம் இவ்விருவகைமண்ணும் எமதுநாட்டில் வேண்டியளவு அகப்படும் பரீக்ஷித்துப்பார்ப்பின் உண்மைதெரியும். மாட்டெருவினும் சிலநிலங்களுக்கு இம்மண்மிகப்பலன்தருவதாய்க் கூறப்படுகின்றது. நம்மூரிலே மேற்குநாடுகளிலே பலவகையான பயிர்கள் மாறிமாறிச் செய்கைபண்ணப்படுகின்றன. அது மிகவும்நன்மையானகாரியம்அன்று அநுபவத்தினாலும் தெரிகின்றது. மாறி மாறிப் பயிர்செய்வதினால் பூமியின்சத்துக்குறைவுபடாது அப்பூமியிலுள்ள பலவகைப்பட்ட சத்துக்களும் பயன்படுதற் கேதுவாகின்றன. செய்துவந்தபயிரையே செய்யின் அப்பயிரினால் ஒரேவகைப்பட்டசத்து இழுக்கப்பட்டதினால் பூமியிலந்தச்சத்து வரவரக்குறைந்து போகின்றது ஆதலினால் நாளுக்குநாள் பயிர் நல்லவிளைவைத்தருவதில்லை மாறிப்பயிர்செய்யும் முறைகளைக் கூறுகின்றோம்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இருபாலை
வித்துவசிரோமணி
சேனதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

# நல்லைவெண்பா.

(ககஅ-ம்பக்கத்தொடர்ச்சி.)

புலிசேர்ந் துவாக்கள் பொலியப் பிணாக்க
ளிலகுகள பத்தொடிசை நல்லூர்—புலவோர்
பொருந்தாரை வேலையிடைப் பொன்றவிக் குஞ்சோதிப்
பொருந்தாரை வேலான் புரம்.

ஆடவர் புலியுடன்பொலியின், பெண்கள் களபத்துடன் இசைந்து பொலிவுறுவர். அவ்வாடவரினும் இப்பெண்கள் மெலியாரினரோ என்பதாம். புலி-ஒருமிருகம் நால்வகைச்சாந்துள் ஒன்று. உவாக்கள்-இளைஞர்கள். பிணாக்கள்-பெண்பொது-பெண்கள். களபம்-முப்பதுவயசு உடையயானை கலவைச்சாந்து "மெலியரோ மெல்லியர் வேற்கையாடவர் புலிவிரா யெதிர்த்திடக்களபம் போக்குவார்" என்பதுமிப்பொருட்டு. சாந்துவகைகள் எதிர்ந்து விளையாடும் பொருள்கள். புலவோர் பொருந்தாரை-தேவர்களதுபகைவரை. வேலை-கடல். பொரும்-தாரை-வேல்-போர்புரிகின்ற கூரிய வேற்படை. ௩௬

சங்கமுடன் றாமரைநற் செந்தாது தானுறலாற்
பிங்கலனூர் போலும் பெருநல்லை—பொங்கரியின்
மாதுவசத்தினன் மானிடனு மாகியோர்
மாது வசத்தினன் வாழ்வு.

சங்கம்-சங்கநிதி. தாமரை-பதுமநிதி. செந்தாது-பொன் என அளகாபுரிக்கியையக்கொள்க. பிங்கலன்-குபேரன் ஊர்-அளகை. சங்கம்-சங்குகள் தாமரை-கமலம். தாது-மகரந்தம் என நல்லூருக்கியையக்கொள்ள பொங்கு-விளங்குகின்ற. அரியின்-மா-துவசத்தினன்-எனப்பிரிக்க. அரி-அக்கினி. துவசம்-கொடி. அழற்கடவுள் கோழிக்கொடியாகி நின்றமைபற்றி இவ்வாறு கூறினர். ஓர்மாது-வள்ளிநாயகியார். வசத்தினன்-வசத்தையுடையவர். வசப்படல்-சுவாதீனமின்றி அமைந்து வழிபடல். ௩௭

சிலம்புவளை யார்பதம்போற் செவ்விப் பறம்புஞ்
சிலம்புபுனை செய்யதிரு நல்லூர்—வலஞ்சேர்
சதகோடி யன்னன்கைத் தாக்குமுக்க ணன்பொன்
சதகோடி யன்னன் றலம்

சிலம்புவளையார்பதம்போல்-ஒலிக்கின்ற வளையல்களணிந்த மகளிர்பதம் நூபுரமணிந்திருக்குமதுபோல. செவ்வி-அழகிய. பறம்பு-மலை, பறம்பு சிலம்பு புனைதலாவது-அவர்கொங்கைகள் மலையின்றன்மையினைப் பொருந்தியிருத்தல். வலம்-வெற்றி. சதகோடியன்-குலிசப்படையினையுடையவர். நான்கைத் தாக்கு முக்கண்ணன்-பன்னிரண்டுகண்களையுடையவர். பொன் சதகோடி அன்னன்-நூறுகோடிபொன்னையொத்தவர். வரும் ௩௮

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதிதுணை.

# சேதுபுராண உரை.

(கஉக-ம் பக்கத்தொடர்ச்சி.)

குமாரசுவாமிப்புலவர்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

## கடவுள் வாழ்த்து.

### சபாபதி.

பூந்தவிசினிருந்தபிரான்முதலோர்காணப்புண்டரிகமகள்கொழுநன்புகழிலங்கை
வேந்தனுயிர்பழிகழுவுமுகத்தால்யார்க்கும்விடையவனையுடையவனும்வேதவாய்மை
யாந்தரங்கம்வெளிசெய்வானனைவரோடுமெணெந்துகந்தமாதனத்திலருச்சித்தேத்து
மேந்துபுனற்சடிலமுடியிராமநாதனிணையடிச்செந்தாமரைகளிறைஞ்சிவாழ்வாம்.

ஆந்தரங்கம்-இரகசியம். செய்வான் என்புழி வான் வினையெச்சவிகுதி. யார்க்கும் வெளிசெய்வான் எனக்கூட்டுக.

இ—ள். திருமகள்கேள்வன் அயனை உள்ளிட்டாரனைவருஞ்சான்றுக இராவணனுயிர்க்கொலையாலாகிய பழியினைப்போக்கும் வாயிலால் சிவபெருமானொருவரே ஆன்மாக்களை அடிமையாக உடையவராமென்னும் வேதவுண்மையினந்தரங்கத்தை எவர்க்கும் வெளிப்படையினுணர்த்திக்காட்ட அணைந்து அருச்சித்து எத்திய இராமநாதனது திருவடிமலர்களைவணங்கி வாழ்வாம். என்றார் என்க.

> "பெருவரையன்றெடுத்தேந்தினன்றன்பெயர்சாய்கெட
> வருவரையாலடர்த்தன்று நல்கியயன்மாலெனு
> மிருவருநாடி நின்றேத்துகோயிலிராமேச்சரத்
> தொருவனுமே பலவாகிநின்றதொருவண்ணமே"

என்பதனல் அயனை உள்ளிட்டார் கண்டமைகாண்க. காட்டக்காணுமியற்கையனுதலின் அயனை முற்கூறினர். அது, "உன்றனை யெதிரேகண்டெம்புயத்தோனுணர்ந்திலன் மால்சொலவுணர்ந்தான்" என்பதனுனுமறிக.

> தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
> பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
> வேவியலுஞ்சிலையண்ணல் செய்தவிராமேச்சரம். என்றும்.

> அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
> பணையிலங்கும் முடிபத்திறுத்த பழிபோக்கிய
> வினையிலியென்று மிருந்த கோயிலிராமேச்சரம். என்றும்.

வருவனவற்றுல் இராவணனுயிர்க்கொலையாற்பழி வந்துற்றவாறும் பின்கழுவப்பட்டவாறும் கண்டுகொள்க.

முப்புரமிறுப்புழி முகுந்தப்புத்தேள் மால்விடையாகித்தாங்க நின்றதலைமையுமப்பழங்கதையின்ஞாபகமுந்தோன்ற "விடையவன்" என்றார்.

"விச்சுவாதிகனும் விசுவசேவியனும் விமலனீயேயெனமறைக, ணிச்சயமாக முழக்கவும்" எனவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூதமுதலவற்றேருடுதித்துள்ளோ
ரளவிடுந் தலைமையாளரென் றவரையகற்றிமால் விடையவனினையே
வளமுறு மெல்லாத்தலைமையுமுடையோன் வருமுதற்காரணனல்லோ
ருளமுறுதியானப்பொருளெனச்சிகைதேர்ந்துரைப்பவுமயங்குவர்சிலரே.
எனவும்.

தசரதன்மதலைதாபித்தேத்தலிற்......பசுபதிப்பெயரிய தனிமுதற்கடவுள்
உம்பர்களெவர்க்கு முயர்ந்தோன் என்பதுதெளிகவியல்புணர்ந்தோரே"

எனவும்கூறப்படுவனவற்றால் "விடையவன்றனே உடையவனும் வேதவாய்மை" தெளிந்துகொள்க.

அரிக்கும் புலப்பாடின்றி மறைந்து திருவருளேயுணர்த்த உணரகின்றவுண்மை என்பார் ஆந்தரங்கம் என்றார்

"மன்றலந்துளவோனயனுடனுன்னுன் மயக்கறத்துணர்ந்தனன்" என்றார்பிறரும்

அனைவரோடும் அணைந்துஅருச்சித்து எத்தி என்றார், அருச்சித்தேத்திவாய்மையினைவெளிசெய்யும் திருவருட்டிறம் திருமாற்கேயுளதாம் என்பதுபோதர.

அளவிலுன்பெருமை யறியவுமுன்றட்கழிவிலாவன்புவைத்திடவுந்
தளமலரெடுத்துன் னருச்சனையாற்றிச் சாலநின்றிருவருள்பெறவும்
வளமலிபுலியூரம் பலத்தமுதே மலர்தலையுலகினுட்சுரும்ப
ருளர்துழாய்ப்படலை மார்புடையண்ணலொருவனே வல்லனுமன்றே.
என்பதூஉமிப்பொருட்டு.

காண, கொழுநன் எத்தும் எந்துபுனற்சடிலமுடி இராமநாதனடிசேர்ந்தாருக்கு அரியயன்முதலாந்தேவர்களாலும் கங்கைமுதலிய தீர்த்தங்களாலும் வரக்கடவபயனொன்றில்லை என்பதாம். என்னை!

"தரும்புகழிராமலிங்கத்தனை யெதிர்கண்டுளோருக்
கரும்பவிழ்பதுமன் மாயனுகியதேவர்தம்மா
லிரும்பிரயாகைகங்கை யிவைமுதலிலங்கு நீரால்
வருபயனில்லையுண்டாமானுடப்பிறவியாக்கம்" என்றாராதலின்.

## அசாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

# அவுஷதம்.

### கஸ்தூரி திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒருஒயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர் அழிவினுல் தாங்க முடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். சം-நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்ருய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்க வாய்வு துர்நடத்தையால் ஆண்மை பலமற்று சையோகம்செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூசதுஜஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று மூளை பலவீனம், ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு; நாட்சென்றபிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஒளஷதம். இந்தமருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம் வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம்வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனுல்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு, மகோதரம்; காய்ச்சல் கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்கு கைகண்ட ஒளஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ. க0. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

### துஜ்ஜிபங்கதைலம்.

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலகாலைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பெலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய், இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரி சையோகத்தால் அநேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்ருர்கள். இவ்விருவகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரிதிராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி சச-தினத்துக்குள் வியாதி சுகப்படும், உக-நாள்தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவேரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ உ. அணு அ. தபாற்செலவு பிரத்தியேகம்.

### வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்திற்கு விற்பனைசெய்துவருகிருர்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிருர்கள். ஆனுற் சாஸ்திரப்படி அதிக பொருள்செலவழித்துச்செய்கிறவர்களிடம் பெறப்பின்னடைகிருர்கள். இது உலகவியல்பே. இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒருகுளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. கஉ-குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். கஉ-குளிகைகளின் விலை ரூபா உ. தபாற்செலவு அணு ச.

சாப்பிடும்விதம்—சையோகஞ்செய்ய அரைமணித்தியாலத்துக்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காய்ச்சியபசுப்பாலில் கற்கண்டுபோட்டுக்குடித்தால் இந்திரியம் இளகாது இளகவேணுமானுல் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்,

கெங்காதரர் தைலம்:—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை அவுன்சு ரூபா ரு.

மகாநாராயண தைலம்:—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்குக் கைகண்டது. ௲ அவுன்சு ரூபா க. மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

### மிருத்துச்சீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை.

எட்டுவிதமான சுரத்துக்கும், அசுத்தசலத்தினுல் கொசுமுதலான விஷசெந்துக்களினுலுண்டாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியா ஆதிய விஷக்காச்சல்களுக்கும், கஅ-விதமான சன்னிக்கும் இதில் ஒ ா மாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகமாகும். ஏழுவேளைசாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். கஉ குளிகையின் விலை ரூபா இரண்டு.

காமனீமது பஞ்சனீ மாத்திரை.

இது தங்கம்; அபரக்பஸ்பம்; கஸ்தூரி. குங்குமப்பூ, லிங்கசெந்தூரம் முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது இதன் சொற்பகுணத்தைமட்டும் காட்டுகிறேன். நீரிழிவு காசம் இ ா மல் ஈளை தீராதவாதரோகம் பிறமேகம் மூலச்சூடு புதிதாய்க்காணும் அண்டவாதம் வெள்ளைமுதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். மூன்றுநாளில் நல்லகுணந்தெரியும் சச-நாளில் வியாதி பூரணசுத்தமாகும். காலை மாலை கச-நாள் சாப்பிடக்கூடிய உஅ-மாத்திரைகளின் விலை ரூபா ௫. சச-நாள் சாப்பிடக்கூடிய அஅ-மாத்திரைகள் எடுத்தால் ரூபா கரு-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிக்கா பிரதம மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுந்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு பீனசக்கபாலம் துர்ஸ்திரீ கமனத்தாலுண்டான நோய்கள் வெண்குட்டம் நீரழிவு போகத்தாலுண்டான நோய்களையெல்லாந் தீர்க்கும். இம் மாத்திரையை உக-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். சச-குளிகையின்விலை ரூபா மூன்றரை.

புத்தகங்கள்.

பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானிடர் எவரும் இகபரநன்மைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போற் போதிக்கக்கூடிய மெத்த அருமையானபுத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்காரநடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளாலியற்றப்பட்டு வாசிப்போருக்கு இன்பத்தையும் மனோற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்ப பிரதிகள்தான் இருக்கின்றன. காலகரணஞ்செய்யவேண்டாம்.

க. கோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி ரூபா ங
உ. கலிக்கோ ,, ச
ங. கைத்தொழிற்போதினி மாபிள்கட்டு ,, க-அ
கலிக்கோக்கட்டு ,, உ
ச. பூலோகௌஷதோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம்சஞ்சிகை க-க்கு அணா ௰
௫- அனேக இங்கிலீஷ்சாமான்களடங்கிய ஒன்பதாம் சஞ்சிகை ஒன்றுக்கு அணா கஉ
௬. சோகன்லால் சரித்திரம் அணா அ
எ. இன்ஸ்பெக்டர் சீபுசாய்புசரித்திரம் அணா கஉ
அ. ஷை சரித்திரமும் சோகன்லால் சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூ க-ச
௯. ரூசியயப்பானியயுத்தம் இருபகுதிகள் ஒருரூபா
௰. இரசமணிசெய்யும் புத்தகம் (அ பக்கம்) ரூ. க-அ

மேற்காட்டியவைகள் வேண்டுவோருக்கு தாமதமின்றிச் சாக்கிரதையோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோர்க்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்குக் காட்லாக்கை யெடுப்பித்துப்பார்க்கவும். இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருட்களைவாங்கி, தினமும்மகிழ்வடையுங்கள். எமதுவிலாசம்.

மகாராஜ கேங்காபிரசாத் பண்டிதர்
மருதானை முதலாம் டிவிசன் No. 74.
கொழும்பு.

## அரியபிரதிமைப்படம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம்(Portrait) எமது ஞானப்பிரகாச ஆபீசிலும், வண். கிழக்கு நாஷனல் ஸ்ரோர் எஸ். வீ. எஸ். வீராச்சாமிப்பிள்ளையிடத்திலும்விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீமான். எஸ். கே. (லோற்றன்) கனகரெத்தினம் அவர்களால் அமைக்கப்பட்டது.

*Printed and published by the Proprietor A. Sanmugaretna Sarma at the Genasa Press, Jaffna,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துஸ்தான் சகாய வீமாச்சங்கம் (லிமிற்றட்)

௧௮௮௨ ம் வருஷத்து இந்தியசங்க சட்டப்பிரகாரம் இச்சங்கம் பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடிரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன்தலைமை அதிகாரசாலை கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி ௩0 ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்பசார் மகாராஜா மனீந்திரசந்திர நந்திபகதூர்

உப சபாநாயகர்கள்

௧. நாட்டோர் மகாராஜா ஜகதீந்தரநாதறாய் பகதூர்.

௨. திகபட்டியாராஜா பிரமாதநாதறாய்.

இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய விதப்படி கட்டிவரலாம். மற்ற வீமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அநுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினாலும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே. லோட்டன் அன் கோ
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.

## பத்திரிகைவேதனம்.

| | ரூ | ச. |
|---|---|---|
| உள்ளூருக்கு வருஷம் ௧-க்கு | ௨ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு வருஷம் ௧-க்கு ... ... | ௨ | ௨௫ |
| பினாங்கு சிங்கப்பூர் வருஷம் ௧-க்கு | ௨ | ௩௮ |
| மோரீஸ் நெட்டால் வருஷம் ௧-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | ௨0 |

கையொப்பக்காரர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாக அனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

## விளம்பரவேதனம்.

| | ரூ | ச. |
|---|---|---|
| வரி ௧-க்கு ... ... | | ௮ |
| கால்பத்திக்கு ... | ௧ | 00 |
| அரைப்பத்திக்கு ... | ௨ | 00 |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ௫0 |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | 00 |

கணேசயந்திரசாலையில்
விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ | ச. |
|---|---|---|
| திரிகோணாசலபுராணம் | 0 | ௭௫ |
| இரகுவம்சம் (செய்யுள்) | ௧ | ௭௫ |
| நல்லைவெண்பாமூலம் | 0 | ௧0 |
| யாழ்ப்பாணச்சமயநிலை | 0 | ௧0 |
| விரோதிகிருது வருஷ | | |
| திருக்கணிதபஞ்சாங்கம் | 0 | ௨௫ |
| வாக்கிய ,, (தமிழில்) | 0 | ௨௫ |
| ௸ (இங்கிலீசில்) | | ௫0 |
| திருவூடல் | 0 | ௫ |
| எட்டிகுடிஏசல் | 0 | ௩ |
| அநுட்டானவிதி | 0 | ௬ |
| சேதுபுராணவசனம் | ௧ | 00 |

ஆ. சண்முகரத்தினசர்மா
கண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

## விக்கிரய புத்தகம்.

| | | ரூ. சதம் |
|---|---|---|
| ௧. | தண்டியலங்காரப்புத்துரை | ௧—00 |
| ௨. | யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | ௧—00 |
| ௩. | சூடாமணிநிகண்டு ௧௨ தொகுதி ௧-வது ௨-வது சொற்பொருள் ௧௨-வதுஉரை | ௧—00 |
| ௪. | இதோபதேசம் | 0—௮ |
| ௫. | நீதிநெறிவிளக்கபுத்துரை | 0—௩௬ |
| ௬. | திருவாதவூரர்புராணமூலம் | 0—௨௫ |
| ௭. | இலக்கணசந்திரிகை | 0—௨௫ |
| ௮. | மேகதூதக்காரிகை | 0—௨௫ |

அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்.

தூய்யதோர்மறைகளாலுந் துதித்திடற்கரியசெவ்வேள். செய்யபோடிகள்வாழ்க சேவலுமயிலும் வாழ்க, வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்க வண்ணன், பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பட்டு பீதாம்பரங்கள்.

சுத்தமானபட்டு.] [நாணயமான ஜரிகை.
சகாய விலைகள்.

பிடித்தமில்லாததைத்
திருப்பிப் பெற்றுக்கொள்ளுவோம்.
கீழே கண்ட பட்டுத்துணிகள்

எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—கசு-முழம் நீளம் உ ௩-அகலம் விளிம்பும்முந்தியும் சரிகைவேலைகள் உடல் சாதா விலை ரூபா் உ0 முதல் ருO-வரை அதே மாதிரி சேலை உடலிலும் சரிகைப்பூ புட்டா போட்டது ரூபா உ0 முதல் ச00 வரை.

ரவிக்கைகள்:—விளிம்பும் முந்தியும் சரிகை வேலைகள் உடல் சாதா ரூபா உ முதல் அ-வரை.

உடலிலும் புட்டா ஜரிகை பூவேலைசெய்தது ரூபா ங முதல் உ0 வரை.

துப்பட்டாக்கள்:—கூ-முழம் உ இ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல் சாதா ரூபா அ முதல் உரு வரை

அதே மாதிரி உடலிலும் ஜரிகை வேலைகள் ரூபா கச-முதல் ருO-வரை.

சவுக்கங்கள்:—உ இ-முழம் நீளம் உ இ-அகலம் சுற்றி ஜரிகை மூலையில் பாங்காய் ரூபா கூ-அ O முதல் கரு-வரை.

அதே மாதிரி உடலிலும் பூக்கள் போட்டது ரூபா கூ முதல் ஙO -வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—சா, எ, அ, கூ-முழம் நீளம் உ இ, உ ௩, ங முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டி மாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபா அ இ முதல் உ0-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பிபோட்டது ரூபா கஉ முதல் ஙO-வரை.

ஷெ சவுக்கங்கள் உ இ × உ இ-முதல் சிகப்புக்கம்பிக் கரைபோட்டது ரூபா ரு முதல் அ-வரை. ஜரிகைக்கம்பிபோட்டது ரூபா கூ முதல் கரு வரை. ஷெ வெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராக்ஷக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

பட்டுத்தலைக் குட்டைகள்:—ச இ ÷ ச இ-முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகை ரூபா கங முதல் உரு-வரை. எல்லாக் கலரிலும் கிடைக்கும் மத்தியில் ஜரிகை புட்டா பூப் போட்டுக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—கூ முழம் நீளம் ரு அகலம் எல்லா நிறத்திலும் ரூபா ரு முதல் அ வரை.

காஷ்மீர் கம்பளிநயம்சால்வைகள்:—ஷெ அகலநீளம் எல்லா நிறத்திலும் சாதா ரூபா அ முதல் கரு வரை. பட்டு [illegible] விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை [illegible] மூலையில் [illegible] ரூபா கO முதல் உO வரை. ஜரிகையில் அதே மாதிரி வேலை [illegible] ரூபா கஉ முதல் ருO வரை.

உருத்திராக்ஷங்கள்:—[illegible] ங ங. [illegible] ரூபா ரு-வரை. [illegible] அ. [illegible] [illegible] முதல் கரு-வரை. [illegible] ரூபா [illegible] வரை.

வயிரவர் காசிக்கயிறு:—[illegible] 100 க்கு ரூபா ங. உ ரு. [illegible] ரூபா உ; [illegible] [illegible].

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரங்கள் செட்டு:—[illegible] வெங்கலக் கால் செம்பு, குடம், கரண்டி முதலிய ஙஉ சாமான்கள் அடங்கியது சிறிது ரூபா உ. பெரிது ரூபா ச.

நயம்கஸ்தூரி:—தோலா க க்கு ரூபா ஙரு.
நயம்பால்காயம்.—சுத்தமானது தோலா க-க்கு அணா உ.

வீ.பி. ஜாபிதா இனமாக அனுப்பப்படும். சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முற்பணம் அனுப்ப வேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பேனி, காசி.

*Manager, Silk Petamber Co*
*Benares City.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org